விலை: 50.00 viber : 076 636 3378
பக்கங்கள் : பதினாறு

# வலம்புரி

## Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

VIJEAY Complex www.vijeaycomplex.com

இனிய நத்தார் வாழ்த்துக்கள்
உங்கள் அனைத்து மங்கல நிகழ்வுகளையும் கொண்டாடி மகிழ்ந்திட எம்மைத் தொடர்பு கொள்ளுங்கள்.
0033687713427
021 221 2899/077 723 0104/077 449 6386
No.199, Chundikuli - Columbuthurai Road, Jaffna.
(9218)

சங்கு 23 வள்ளுவர் ஆண்டு 2052 மார்கழி 10 சனிக்கிழமை (25.12.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 006

## நாவற்குழி புதிய குடியிருப்பில் குழு மோதல்; நால்வர் படுகாயம்

### இராணுவம் வரவழைக்கப்பட்டு நிலைமை கட்டுப்பாட்டுக்குள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நாவற்குழி புதிய குடியிருப்பு பகுதியில் நேற்று மாலை இடம் பெற்ற குழு மோதலில் பெண் ஒருவர் உட்பட நால்வர் படுகாயம் அடைந்துள்ளனர்.

குழு ஒன்று மற் றொரு தரப்பின் வீடுகள் 15

## கொரோனா 20 பேர் பலி

(கொழும்பு)

ஆண்கள் 12 பேர் உட்பட இலங்கையில்மேலும்20 கோவிட் மரணங்கள் உறுதி செய்யப்பட்டுள்ளது. 15

## 13 தமிழ் மக்களுக்கு தீர்வாக அமையாது

### அதனாலேயே விமர்சித்தேன் சுமந்திரன் எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு சமர்ப்பிப்பதற்கென தமிழ் பேசும் கட்சிகள் இணைந்து ஆவணத்தை தயாரிக்கும் வகையில் ரெலோ மேற்கொண்ட முயற்சியை மழுங்கடிக்கும் எண்ணம் தமக்கு 02




### மானிய விலையில் பொருட்களை வழங்கக்கூடாது

# மக்கள் சிக்கனமாக பயன்படுத்துவதில்லை

### பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் திஸாநாயக்க



(கொழும்பு)

சகல நாடுகளிலும் பொருட்களின் விலைகள் மற்றும் வாழ்க்கைச் செலவுகள் அதிகரித்துவரும் சந்தர்ப்பத்தில் இலங்கையில் அத்தியாவசிய பொருட்களை மானிய விலைகளில் வழங்குவதை தான் ஏற்றுக் கொள்ளவில்லை என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

இந்து ஆலயங்களில்

## விக்கிரகங்கள் திருட்டு தொடர்பில் சந்தேகத்தில் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை பொலிஸ் பிராந்தியத்தில் அண்மைய நாட்களில் இந்து ஆலயங்களில் 5 விக்கிரகங்கள் 15

## பிரபாகரனை பற்றிக் கதைக்கும் பொன்சேகாவுக்கு சஜித் பிரேமதாஸவின் கல்வி அறிவு தெரியுமா?

### எம்.கே.சிவாஜிலிங்கம் கேள்வி



(கொழும்பு)

மேதகு பிரபாகரனின் கல்வி அறிவைப் பற்றி கதைக்கும் சரத் பொன்சேகாவிற்கு தனது கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் படிப்பறிவு தொடர்பில் தெரியுமா? என முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் கேள்வி எழுப்பியுள்ளார்.

சரத் பொன்சேகா மேதகு பிரபாகரன் தொடர்பாக தெரிவித்த கருத்து தொடர்பில் நேற்று யாழ்ப்பாணத் 15

## வவுனியாவில் காஸ் அடுப்பு வெடித்து சிதறியது

(வவுனியா)

வவுனியா, காத்தார்சின்னக் குளம் பகுதியில் வீடு ஒன்றில் பெண் ஒருவர் சமைத்துக் கொண்டிருந்தபோது காஸ் அடுப்பு வெடித் 15

அரச ஊழியர்களுக்கு

## முற்பணத் தொகை வழங்க அரசு தீர்மானம்

(கொழும்பு)

அனைத்து அரச ஊழியர்களுக்கும் 2022 ஜனவரி முதலாம் திகதி 4 ஆயிரம் ரூபாய் விசேட முற்பணத் தொகையை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கான சுற்று 15



## இந்திய மீனவர்களின் அத்துமீறலை கண்டித்து யாழ்ப்பாணத்தில் போராட்டம்

03

## ‘ஒரு நாடு ஒரு சட்டமல்ல’ ஒரு ஆளுக்கு ஒரு சட்டம்

### ஞானசார தேரர் தொடர்பில் மனோ எம்.பி விமர்சனம்

(கொழும்பு)

அமைச்சர் அலி சப்ரியை பதவி விலகச் சொல்லும் ஞானசார தேரரை, ஜனாதிபதி செயலணிக்கு, ஜனாதிபதி தான் நியமித்தார். 15

## அமைச்சர் டக்ளஸை கண்டதும் நழுவிச் சென்ற முன்னணியினர்

(யாழ்ப்பாணம்)

யாழில் நேற்று மீனவர்களின் போராட்டத்திற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வருகை தருவதைக் கண்டதும் கஜேந்திரகுமார் அணி அவ்விடத்தை விட்டு நழுவிச் சென்றுள்ளது.

யாழ். மாவட்ட மீனவர்களினால் நேற்றைய தினம் இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகையினை நிறுத்தக்கோரி யாழ். 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

கிளி. செல்லியாதீவு அதிபர்
திரு. இ. கலைச்செல்வன் அவர்களுடைய
அன்புத் தாயார்

அமரர்
**சிவபாக்கியம் இராசலிங்கம்**

பிறப்பு : 1948.05.06 இறப்பு : 2021.11.25

அவர்கள் இறைபதம் அடைந்து
31 ஆம் நாள் நினைவு தினத்தில்
அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

(C-3349)
**அதிபர்கள் சங்கம்**
**கிளிநொச்சி மாவட்டம்**

# யாழ்ப்பாணம் மாநகர சபை 2022 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையவாறு வீதவரி விதித்தல்

யாழ்ப்பாணம் மாநகர சபையின் தத்துவங்களை அமுல்படுத்துவதுடன், பணிகள், செயற்பணிகளை நிறைவேற்றுகின்ற யாழ்ப்பாணம் மாநகர சபையின் கௌரவ முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் ஆகிய நான் யாழ்ப்பாணம் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 286அ பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய மேற்படி சட்டத்தின் 230 (1) பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய யாழ்ப்பாணம் மாநகர சபை அதிகாரப் பிரதேசத்திற்கு 2022 ஆம் ஆண்டிற்கு ஏற்புடையதாக வீதவரி விதிப்பதானது பின்வருமாறு இருத்தல் வேண்டும் என்று தீர்மானிக்கின்றேன். அதாவது,

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 238 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு மாநகர சபைகள் அதிகாரப் பிரதேசத்திற்குள் அமைந்துள்ள சகல வீடுகள், கட்டடங்கள், காணிகள் மற்றும் நிர்மாணிப்புகளின் வருடாந்த பெறுமதிக்கு 2021 ஆம் ஆண்டுக்கான விலைமதிப்பு / மதிப்பீட்டை 2022 ஆம் ஆண்டிற்கான விலைமதிப்பு / மதிப்பீடாக நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்றும், மேற்படி விலை மதிப்பின் அடிப்படையில் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 286அ ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அக்கட்டளைச் சட்டத்தின் 230(1) பிரிவிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு மேற்படி ஆதனத்தின் மீது குறித்த மதிப்பீட்டுக்கு வருடாந்தப் பெறுமதியில் எட்டு சதவீதமான (8%) வருடாந்த வீதவரி வெற்றுக்காணிகள் மற்றும் வதிவிடங்களுக்கும், 10 சதவீதமான (10%) வருடாந்த வீதவரியை சகல ஏனைய இடங்களுக்கும் விதிக்கப்படல் வேண்டும் என்றும்,

மேலும், 2022 ஆம் ஆண்டில் பின்வரும் அட்டவணையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள ஒவ்வொரு காலாண்டிற்கும் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் அவ்வாறு விதிக்கப்படுகின்ற வருடாந்த வீதவரியை யாழ்ப்பாண மாநகர சபையின் நிதியத்திற்குச் செலுத்த வேண்டும் என்றும், அவ்வாறு வருடாந்த வீதவரி 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் முழுமையாக செலுத்தப்படுமாயின், வருடாந்த வீதவரித் தொகையில் நூற்றுக்கு பத்து சதவீதமான (10%) கழிவும், மேற்படி அட்டவணையின் ஒவ்வொரு காலாண்டுக்கும் எதிரே மூன்றாவது நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் குறித்த வீதவரித் தொகை யாழ்ப்பாணம் மாநகர சபையின் நிதியத்திற்குச் செலுத்தப்படுமாயின் குறித்த காலாண்டுக்குரிய தொகையில் ஐந்து சதவீதமான (5%) ஆன கழிவும் யாழ்ப்பாணம் மாநகர சபையினால் வழங்கப்படும் என்றும் சொல்லப்பட்ட காலங்களில் செலுத்தப்படாதவிடத்து வெற்றுக்காணிகள் மற்றும் வதிவிடங்கள் மீது நூற்றுக்கு பதினைந்து வீதமான (15%) மற்றும் சகல ஏனைய இடங்கள் மீது நூற்றுக்கு இருபது வீதமான (20%) விறாந்துக் கட்டணம் அறவிடப்படும் என்றும் தீர்மானிக்கின்றேன்.

**கௌரவ.விஸ்வலிங்கம் மணிவண்ணன்**
**முதல்வர்,**
**மாநகர சபை, யாழ்ப்பாணம்.**

## மேற்படி அட்டவணை

| காலாண்டு | செலுத்தவேண்டிய திகதி | 5% கழிவுக்கு உரித்துப் பெறும் இறுதித் திகதி |
|---|---|---|
| முதலாவது காலாண்டு | 01.01.2022 - 31.03.2022 | 31.01.2022 |
| இரண்டாவது காலாண்டு | 01.04.2022 - 30.06.2022 | 30.04.2022 |
| மூன்றாவது காலாண்டு | 01.07. 2022 - 30.09.2022 | 31.07.2022 |
| நான்காவது காலாண்டு | 01.10.2022 - 31.12.2022 | 31.10.2022 |

**குறிப்பு:** 2022 ஆம் ஆண்டிற்கான ஆதனவரி அறிவித்தல்கள் தற்போது விநியோகிக்கப்பட்டு வருகின்றன. 31.01.2022 ஆம் திகதிக்குள் செலுத்துவதன் மூலம் 10% கழிவினையும் பெற்றுக்கொள்ள முடியும் என்பதனையும் அறியத் தருகின்றேன்.

(C-3348)

## 13...

இல்லை என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும்பேச்சாளருமான எம்.ஏ.சுமந் திரன் தெரிவித்துள்ளார்.

எனினும் 13 ஆவது அரசியலமைப்பு திருத்தம் என்பது தமிழ் மக்களுக்கான தீர்வாக அமையாது என்பதன் அடிப்படையிலேயே குறித்த சந்திப்பு குறித்து தாம் விமர்சனங்களை முன்வைத்ததாக அவர் கூறியுள்ளார்.

எனினும் இறுதியில் தமிழ் பேசும் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து இணக்கம் வெளியிட்டதன் அடிப்படையில் குறித்த ஆவணத்தின் பொருளானது மாற்றப்பட்டதாகவும் எம்.ஏ.சுமந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

முன்னர் 13 ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்த கோருதல் என்ற பெயரில் ஆவண வரைபு தயார் செய்யப்பட்டிருந்த போதிலும் புதிய ஆவண வரைபில் அதன் நோக்கம், பொருள் என்பன மாற்றப்பட்டுள்ளதாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் கடிதத் தலைப்பில் வெளியிட்ட அறிக்கையில் எம்.ஏ. சுமந்திரன் சுட்டிக் காட்டியிருந்தார்.(ம)

# கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தின் பணியாளரான
**பாமினி** அவர்களின் அன்புத் தந்தை

**வைத்திலிங்கம் செல்வரட்ணம்**

அவர்களின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினருக்கு எமது
அஞ்சலியைத் தெரிவிப்பதோடு
அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(9232)

**M.இராஜநாயகம் அன் கோ பட்டயக் கணக்காளர்கள்**
**பணியாளர்களும் இயக்குனரும்**

காரைநகர்
கிழவன்காடு கலாமன்றம் நடாத்தும்


# பரிசளிப்பும் கலைநிகழ்வும் அழைப்பு

இடம் : கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கு, காரைநகர்.
காலம் : 26.12. 2021 ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 மணி

தலைவர் : திரு. ந. **சோதிநாதன்** அவர்கள்
(ஸ்தாபகரும் தலைவரும் கிழவன்காடு கலாமன்றம், காரைநகர்)

பிரதம விருந்தினர் : திரு.திருமதி. **சிவதாஸ் சுஜீபா** தம்பதியினர்
(பிரதிப் பணிப்பாளர், பண்பாட்டலுவல்கள் திணைக்களம், வடமாகாணம்)

சிறப்பு விருந்தினர் : திரு. இ. **சர்வேஸ்வரா** அவர்கள்
(விரிவுரையாளர், கல்வியல்துறை, யாழ். பல்கலைக்கழகம்)



துறைசார் விருந்தினர்கள் : கலாநிதி ஸ்ரீமதி. **த. ஆனந்தஜோதி** அவர்கள்
(தலைவர், நடனத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

நாதஸ்வர கலாஜோதி : **K.K. நாகதீபன்** அவர்கள் (நாதஸ்வர வித்துவான்)

கௌரவ விருந்தினர்கள் :
கலைமாடக்கோன் திரு. திருமதி. **சிவஞானம் உமாதேவி** தம்பதியினர்
(கௌரவ உறுப்பினர், கிழவன்காடு கலாமன்றம், காரைநகர்)

கல்விக்காருண்யன் :
திரு.திருமதி. **ESP நாகரத்தினம் தங்கமலர்** தம்பதியினர்
(தொழிலதிபர், ESP நிறுவனம்)



## நிகழ்ச்சிகள்

- நாட்டியாஞ்சலி

நெறியாள்கை :- நுண்கலைமாணி **ஸ்ரீமதி ஸ்ரீதேவி கண்ணதாசன்**

- பட்டிமண்டபம்

தலைப்பு : "தற்கால சீரழிவுக்கு காரணம்"

| பண்பாடு சிதைந்தமையே! | நவீனம் வளர்ந்தமையே! |
|---|---|
| திரு. ந. ஜங்கரன் | திரு. T .ஹர்ஷன் |
| செல்வி. மோ. டிலோஜினி | செல்வி. சி. அபிஷாயினி |
| காரை க. வினோதன் | திரு. த. கருணாகரன் |

நடுவர் : **சிதம்பரஜோதி, தமிழருவி த. சிவகுமாரன்**

(C-3350)

குறிப்பு: நிகழ்விற்கான இலவச போக்குவரத்து சேவைகள் யாழ்.
கிளையிலிருந்து ( 428.K.K.S வீதி ) பி.ப 1.30 மணிக்கு ஆரம்பமாகும்.
நிகழ்வுகள் சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக நடைபெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**கிழவன்காடு கலாமன்றம், காரைநகர்.**

# நல்லூர் பாம் சென்ரர்

உள்ளூர் உற்பத்தி செய்யப்பட்ட
புறொயிலர், கல்பேர்ட், ஊர்ச் சேவல்
(பேறன்ஸ்) காலை 7 மணி முதல் மாலை
7 மணி வரை சுகாதார முறைப்படி
சுத்தம் செய்து கொடுக்கப்படும்.
அத்துடன் முட்டையும் விற்கப்படும்.
வளர்புத் தாரா விற்பனைக்கு உண்டு.

**நல்லூர் பாம் சென்ரர்,**
**இல.19, முருகேசர் வீதி,**
**நல்லூர்.**

(9212)

# ஆசிரியர்கள் தேவை

எமது கல்வி நிறுவனத்திற்கு தரம் 1
தொடக்கம் தரம் 5 வரை கற்பிக்கக்
கூடிய ஆசிரியர்கள் உடன் தேவை.
கற்பித்தல் அனுபவமும் பாடசாலை
ஆசிரியர்களும் விரும்பத்தக்கது.

**புதிய நாவலர் கல்வி நிலையம்,**
**ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.**
**077 459 8440**

(9204)

# அம்புலன்ஸ் சாரதிக்கான ஆட்சேர்ப்பு

சென். ஜோன் அம்புலன்ஸ் யாழ். மாவட்ட அம்புலன்ஸ்
சேவையின் சாரதி வெற்றிடத்தை பூர்த்தி செய்வதற்கு
விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பம்
கோரப்பட்டுள்ளது. இதற்கான நேர்முகப் பரீட்சை 01.01.2022
அன்று மாலை 4.00 மணிக்கு சென். ஜோன் அம்புலன்ஸ்,
யாழ். மாவட்ட தலைமைக் காரியாலயம், 1ஆம் குறுக்குத் தெரு,
இல. 161, யாழ்ப்பாணத்தில் நடைபெறும். கொடுப்பனவுகள்
நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**மேலதிக விபரங்களுக்கு**
**அவசர அம்புலன்ஸ் சேவை இலக்கம் :**
**071 019 9199, 021 321 4444**

**செ. செல்வறஞ்ஜன் O.St.J**
**மாவட்ட ஆணையாளர்,**
**சென். ஜோன் அம்புலன்ஸ்,**
**யாழ். மாவட்டம்.**

(9227)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அழிக்காதே... அழிக்காதே... எமது வாழ்வாதாரத்தை அழிக்காதே

# இந்திய மீனவர்களின் அத்துமீறலை கண்டித்து யாழில் வீதி மறியல் போராட்டம்







(யாழ்ப்பாணம்)

இந்திய இழுவைப்படகு மீனவர்களின் அத்துமீறலைக் கண்டித்து யாழ்.மாவட்டக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம் மற்றும் பல்வேறு மீனவ அமைப்புக்களின் ஏற்பாட்டில் நேற்று வெள்ளிக்கிழமை யாழ்.மாவட்டச் செயலகத்தை முற்றுகையிட்டுப் போராட்டம் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து யாழ். மாவட்டச் செயலகத்தின் முன்பாக ஏ-9 வீதியை இடை மறித்தும் மீனவர்கள் மாபெரும் வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்கள் அழிக்காதே... அழிக்காதே... எமது வாழ்வாதாரத்தை அழிக்காதே", "எமது வளங்களை அழிக்காதே", "எமது வயிற்றில் அடிக்காதே", "கைது செய்...கைது செய்...இந்திய மீனவர்களைக் கைது செய்...", "பறிமுதல் செய்யும் இந்திய மீனவர்களின் படகுகளை விடுவிக்காதே", "போராடுவோம்... போராடுவோம்... தீர்வு கிடைக்கும் வரை போராடுவோம்" உள்ளிட்ட பல்வேறு கோஷங்களை எழுப்பி எதிர்ப்பில் ஈடுபட்டனர்.

மீனவர்களின் போராட்டம் காரணமாக ஏ-9 வீதியுடனான போக்குவரத்துத் தடைப்பட்டது. இதேவேளை, மேற்படி போராட்டம் இடம்பெற்ற பகுதிக்கு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேரில் விஜயம் செய்து அவர்களுடன் கலந்துரையாடினார். இதன்போது மீனவ அமைப்புக்களின் பிரதிநிதிகள் இந்திய இழுவைப் படகு மீனவர்களின் அத்துமீறல் தொடர்பிலும், இதனால், தாம் எதிர்நோக்கி வரும் பல்வேறு பாதிப்புக்களையும் எடுத்துக் கூறினர்.

உங்கள் பிரச்சினைகளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் நேரடிக் கவனத்திற்கு எடுத்துச் சென்று விரைவில் தீர்வு பெற்றுத் தர நடவடிக்கை எடுப்பதாக உறுதிமொழி வழங்கியதையடுத்து மீனவர்கள் தமது போராட்டத்தை கைவிட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(நி-5-18-33-101-104)

## திருப்பதி ஏழுமலையானை தரிசித்தார் பிரதமர்

(டில்லி)

இந்தியா சென்றுள்ள பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் குடும்பத்தினர் நேற்று வெள்ளிக்கிழமை திருப்பதி ஏழுமலையான் கோவிலில் சுவாமி தரிசனம் செய்தனர். (நி-5)




# கண்ணீர் அஞ்சலி



## திரு.கனகரட்ணம் கேசவன்

### மூத்த சட்டத்தரணி

புன்முறுவல் பூத்த சாந்த முகத்தோனே
உங்கள் கம்பீர நடை எங்கே?
சட்டத்தரணியாய், நீதிவானாக,
மரண விசாரணை அதிகாரியாக சேவை செய்தீர்
பாரினில் உங்களைத் தெரியாதார் உளதோ?
தந்தை வழி மைந்தன் என்று வாழ்ந்தீர்
மாமா லயன் பரமசாமியின்
அபிவிருத்தி பணியினைத் தொடர்ந்தீர்
காலனவன் கண் உங்களைக் கண்டதேனோ?
சிவன் திருவடி சென்ற உமது
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(9208)

## சிங்கம்ஸ் பார்மஸி, கோண்டாவில்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## லங்கா பிறீமியர் லீக்- 2021

# இரண்டாவது முறையாகவும் சம்பியனானது ஜப்னா

லங்கா பிறீமியர் லீக் இருபது -20 கிரிக்கெட் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதிப் போட்டியில் திசர பெரேரா தலைமையிலான ஜப்னா கிங்ஸ் தொடர்ந்தும் இரண்டாவது முறையாகவும் சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது.

அதன்படி பானுக ராஜபக்ஷ தலைமையிலான காலி கிளாடியேட்டர்ஸ் அணிக்கு எதிரான இறுதிப்போட்டியில் ஜப்னா கிங்ஸ் 23 ஓட்டங்களினால் வெற்றி பெற்று வெற்றிக் கிண்ணத்தையும், 20 மில்லியன் ரூபா பணப்பரிசையும் தனதாக்கியது.

அம்பாந்தோட்டை, சூரிய வெவ மைதானத்தில் ஆரம்பமான இப் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற ஜப்னா அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

அதற்கிணங்க முதலில் களமிறங்கிய அவிஷ்க பெர்னாண்டோ மற்றும் ரமானுல்லா குர்பாஸ் ஜோடி முதல் விக்கெட்டுக்கு 56 ஓட்டங்களை சேர்த்தது.

பின்னர் 5.2 ஆவது ஓவரில் குர்பாஸ் 35 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, முதல் பவர் பிளேயின் முடிவில் ஜப்னா கிங்ஸ் ஒரு விக்கெட் இழப்புக்கு 61 ஓட்டங்களை எடுத்தது.

குர்பாஸ் ஆட்டமிழந்து வெளியேறியிருந்தாலும், அவரையடுத்து களமிறங்கிய கோஹ்லர்-காட்மோருடன் ஜோடி சேர்ந்து அதிரடி காட்டி வந்தார் அவிஷ்க.

இரண்டாவது தகுதிச் சுற்றில் சதம் அடித்த வலது கை தொடக்க ஆட்டக்காரர் அவிஷ்க மொத்தமாக 41 பந்துகளில் 2 சிக்ஸர்கள், 8 பவுண்டரிகள் அடங்கலாக 63 ஓட்டங்களை எடுத்தார்.

அந்த ஓட்ட இலக்குடனே தனது இன்னிங்ஸை முடித்துக் கொண்ட அவிஷ்க, நுவான் துஷாரவின் பந்து வீச்சில் தனுஷ்க குணதிலக்கவிடம் பிடிகொடுத்து வெளியேறினார். இதனால் ஜப்னா அணியின் இரண்டாவது விக்கெட் 12.4 ஓவரில் (119-2) வீழ்த்தப்பட்டது.

அடுத்து வந்த சோயிப் மாலிக்கும் அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். எனினும் அதிக நேரம் ஆடுகளத்தில் தாக்கு பிடிக்காத அவர் 23 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

இறுதியாக திசர பெரேராவும் கோஹ்லர்-காட்மோரும் ஜோடி சேர்ந்து எதிரணியின் பந்துகளை சின்னாபின்னமாக்கினர். குறிப்பாக இறுதி ஓவரில் மாத்திரம் 19 ஓட்டங்கள் பெறப்பட்டது.

அந்த ஓட்டத்தின் உதவியுடன் 20 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட் இழப்புக்கு 201 ஓட்டங்களை குவித்தது ஜப்னா.

ஆடுகளத்தில் காட்மோர் 41 பந்துகளில் 3 சிக்ஸர்கள், 2 பவுண்டரிகள் அடங்கலாக 57 ஓட்டங்களுடனும், திசர பெரேரா 9 பந்துகளில் 2 சிக்ஸர்கள், ஒரு பவுண்டரி அடங்கலாக 17 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர்.




பின்னர் 120 பந்துகளில் 202 ஓட்டங்கள் என்ற வலுவான இலக்கினை துரத்திய காலி கிளாடியேட்டர்ஸ°க்கு தொடக்க ஆட்டக்காரர்களான தனுஷ்க குணதிலக்க மற்றும் குசல் மெண்டிஸ் ஆகியோர் 26 பந்துகளில் 63 ஓட்டங்களை எடுத்து விரைவான தொடக்கத்தை பெற்றுக் கொடுத்தனர்.

இந்நிலையில் 5 ஆவது ஓவருக்காக வனிந்து ஹசரங்க பந்துப் பரிமாற்றம் மேற்கொள்ள, அந்த ஓவரின் இரண்டாவது பந்து வீச்சில் அதிரடி காட்டி வந்த தனுஷ்க குணதிலக்க 54 (21) ஓட்டங்களுடன் வெளியேறினார்.

அடுத்து களமிறங்கிய பென்டங்க்கும் எதிர்கெண்ட முதல் பந்திலேயே டக்கவுட் ஆனார்.

அவரின் வெளியேற்றத்தை அடுத்து தொடர்ந்து வந்த மொஹமட் ஹபீஸ் 10 ஓட்டங்களுடன் ரன் அவுட் ஆக ஆட்டம் இக்கட்டான நிலைக்கு சென்றது. ஆரம்பத்தில் வலுவான நிலையில் இருந்த அணி 6.2 ஓவரில் 3 விக்கெட்டுகளை பறிகொடுத்து 84 ஓட்டங்களை பெற்றது.

அடுத்தடுத்து வந்த துடுப்பாட்ட வீரர்களின் தொடர்ச்சியான ஆட்டமிழப்பினால் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் அவர்களால் 9 விக்கெட் இழப்புக்கு 178 ஓட்டங்களை மாத்திரமே பெற முடிந்தது. பந்து வீச்சில் ஹசரங்க மற்றும் சதுரங்க டிசில்வா ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும், சுரங்க லக்மால், மகேஷ் தீக்ஷன மற்றும் ஜெய்டன் சீல்ஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

இறுதியாக 23 ஓட்டங்களினால் வெற்றி பெற்ற ஜப்னா இரண்டாவது முறையாகவும் எல்.பி.எல். கிண்ணத்தை கைப்பற்றியது. போட்டியின் ஆட்டநாயகனாகவும், தொடரின் ஆட்டநாயகனாகவும் அவிஷ்க பெர்னாண்டோ தெரிவானார். (4-6)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2477

### வதனா




### நியாஸ்




### மதுசன்




### ருக்சாயினி




### நீதுஷா




### லோகேஷ்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்புறவின் வெளிப்பாடே நத்தார் பண்டிகை

## வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி



(கொழும்பு)

இயேசு கிறிஸ்துவின் பிறப்புடன் தொடர்புடைய நத்தார் பண்டிகையானது, உலகெங்கிலும் உள்ள கிறிஸ்தவர்களால் மாத்திரமன்றி முழு மானிட சமூகத்துக்கிடையில் பிரிக்க முடியாத தொடர்புகளைப் பலப்படுத்துகின்ற மகிழ்ச்சிகரமான ஒரு நன்நாளாகும் என நத்தார் தின வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

நத்தார் கலாசார விழுமியங்கள், இன, மத பேதமின்றியும் வயது வேறுபாடின்றியும் அனைவரது உள்ளங்களையும் உற்சாகமூட்டுகின்றன.

நிலவுகின்ற உலகளாவிய கொவிட் 19 தொற்றுப்பரவல் காரணமாக இவ்வருட நத்தார் பண்டிகையை, சுகாதாரப் பரிந்துரைகளுக்கு ஏற்ப கொண்டாட வேண்டி ஏற்பட்டுள்ளது. இரண்டு வருட காலமாக, தனிப்பட்ட ரீதியாகவும் சமூக ரீதியாகவும் ஒரு நாடு என்ற வகையில் ஒவ்வொருவரினதும் மதங்களினால் பயிற்றுவிக்கப்பட்ட ஆன்மிகச் சிந்தனைகள் மற்றும் ஒழுக்கம் என்பன தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு உறுதுணையாக அமைந்தன.

இவ் வருட நத்தார் பண்டிகையின் போது இயேசு கிறிஸ்துவின் அன்பின் நற்செய்தி, இலங்கை வாழ் கிறிஸ்தவ சகோதரர்களான உங்களுக்கும் உலகளாவிய கிறிஸ்தவ மக்களுக்கும் கிடைக்கட்டும், உங்கள் அனைவருக்கும் இனிய நத்தார் தின நல்வாழ்த்துக்கள் என அவர் தெரிவித்தார். (நி-5)

# கோழிப் பண்ணையில் தீ மூவாயிரம் கோழிகள் தீக்கிரை

(குருநாகல்)

குருநாகல், பன்னல பகுதியில் அமைந்துள்ள கோழிப் பண்ணையொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் சுமார் மூவாயிரம் கோழிகள் உயிரிழந்துள்ளன.

எரிவாயு கசிவினால் இந்த தீப் பரவல் ஏற்பட்டுள்ளதாக ஆரம்பகட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி-5)

# குடும்ப உறுப்பினர்களுடன் பண்டிகைகளை கொண்டாடுங்கள்

(கொழும்பு)

கொரோனா வைரஸின் ஒமிக்ரோன் மாறுபாட்டின் பரவலைக் கருத்திற்கொண்டு, குடும்ப உறுப்பினர்களுடன் மட்டும் பண்டிகைகளைக் கொண்டாடுமாறு சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (நி-5)


## கண்ணீர் அஞ்சலி



அமரர்:

திரு. சின்னத்தம்பி தியாகராஜா

(Managing Diretor - S.T.R. FILMS
Film inporter- STR FILMS)

முன்னாள் பொருளாளர் இலங்கை தமிழ் அரசு கட்சி

யாழ். வண்ணார்பண்ணையை பிறப்பிடமாகவும், கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம், பம்பலப்பிட்டி கொழும்பு ஆகிய இடங்களை வாழ்விடமாகவும் கொண்டிருந்தவர். ராஜா சினிமா- யாழ்ப்பாணம், சரஸ்வதி சினிமா- திருகோணமலை, சாந்தி சினிமா, சுகந்தி சினிமா- மட்டக்களப்பு, வசந்தி சினிமா, அமுதா சினிமா- வவுனியா அவர்கள் 21.12.2021 அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் மறைவால் துயருறும் மனைவி, பிள்ளைகள், உறவினர்களுக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

(9226)

"Daisy-kudil"
104/ 18 A, Sangamita Mawatha
colombo-13

Lion, A.P.J.Manoharan
தலைவர் தந்தை செல்வா நற்பணி மன்றம்
தலைவர் அமரர் டெய்சி பற்றிமா நற்பணி மன்றம்
ஸ்தாபகர் ஏழாலை வடக்கு அருள்மேரி சமூக அபிவிருத்தி மன்றம்
இல.133, மதவடி, ஏழாலை வடக்கு, யாழ்ப்பாணம்.

# கண்ணீரில் கரைந்த ஐந்தாண்டு...

தோற்றம்- 01.05.1955 மறைவு- 19.12.2016

திருமதி.

## பரமேஸ்வரி தங்கவேலாயுதம் (கமலா)

திதி- அபரபக்க சஷ்டி



ஆலம் விழுதுபோல் அன்புடன் அரவணைத்து
பாலமாய் உறவுகளைப் பாங்குடன் காத்த தாயே!
சோகத்தைத் தந்து சொல்லாமல் சென்றதெங்கே
தாகம் மீதுரத் தவிக்கின்றோம் தரணியிலே!

இன்முகம் காட்டி இன்னல்கள் கழைந்து
அன்புடன் நேசித்த அணையாத தீபமே!
பூத்த உந்தன் கொடிகள் தவிக்க
மூத்த கோபுரமே முற்றாகச் சாய்ந்ததேனோ!

வேரை இழந்த மரங்களால் வெந்துருகி
ஆரை நோவோம் யார்க்கெடுத் துரைப்போம்!
ஐந்தாண்டு ஆறாத காயத்துடன் அழுகையோடு
பந்தமே உனைப் பிரிந்து பரிதவித்து நிற்கின்றோம்

மண்ணுள்ள வரையும் மறையாது சோகம்
கண்ணீரால் அஞ்சலிகள் காணிக்கை ஆக்குகிறோம்!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(9201)

பொற்பதி, குடத்தனை பிரிவால் துயருறும் :- குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடக்கு மருத்துவமனைகளுக்கு புதிதாக 54 மருத்துவர்கள்

(யாழ்ப்பாணம்)

**வடக்கு மாகாண மருத்துவமனைகளுக்கு புதிதாக 54 மருத்துவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.**

அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, மத்திய சுகாதார அமைச்சினால் உள்ளகப் பயிற்சியை நிறைவு செய்த மருத்துவ அதிகாரிகளுக்கு நேற்று முன்தினம் நாடளாவிய ரீதியில் நியமனங்கள் வழங்கப்பட்டன.

இந்த நியமனத்தில் வட மாகாணத்திற்கு 54 மருத்துவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதில் 15 பேர் யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு உட்பட்ட மருத்துவமனைகளுக்கும் 14 பேர் மன்னார் மாவட்டத்திற்கும் 10 பேர் முல்லைத்தீவு மாவட்டத்திற்கும் 8 பேர் கிளிநொச்சி மாவட்டத்திற்கும் 7 பேர் வவுனியா மாவட்டத்திற்கும் நியமிக்கப்பட்டனர்.

இதற்கு மேலதிகமாக மேலும் 6 மருத்துவ அதிகாரிகள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். (4-5-18-33)

# அரச மருத்துவ அதிகாரிகள் அமைச்சர் டக்ளஸுடன் சந்திப்பு



(யாழ்ப்பாணம்)

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் வடபிராந்தியத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மருத்துவ அதிகாரிகள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை யாழ். நகரில் அமைந்துள்ள ஈபிடிபியின் தலைமை அலுவலகத்தில் சந்தித்து தாம் முன்னெடுத்து வரும் பணிப்புறக்கணிப்பு போராட்டம் தொடர்பில் தெளிவுபடுத்தினர்.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் யாழ் மாவட்ட இணைப்பாளர் மருத்துவ கலாநிதி க.உமாசுதன் தலைமையிலான மருத்துவ அதிகாரிகள் குறித்த சந்திப்பில் கலந்து கொண்டனர்.

அத்துடன் வடமாகாணத்தின் ஏனைய கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் தலைவர்களையும் பாராளுமன்ற உறுப்பினர்களையும் எதிர்வரும் நாட்களில் சந்தித்துத் தமது போராட்டம் தொடர்பில் தெளிவுபடுத்தவுள்ளதாகவும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் தெரிவித்தார். (4-5-18)

# காரைநகர் கடற்பரப்பில் 365 கிலோ கஞ்சா மீட்பு

## இருவர் மடக்கிப் பிடிப்பு



(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறைப் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட காரைநகர் கடற் பகுதியில் 365 கிலோ கஞ்சாவுடன் சந்தேக நபர்கள் இருவர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டனர்.

காரைநகர் கடற் பகுதி ஊடாக கஞ்சாவைக் கடத்தி வந்த வேளை கடமையிலிருந்த கடற்படையினர் அவர்களை மடக்கிப் பிடித்தனர். இதன்போது, அவர்களிடமிருந்து 365 கிலோ கஞ்சா மற்றும் ஒரு படகு என்பன மீட்கப்பட்டன.

இதேவேளை, கடற்படையினரின் விசாரணைகளின் பின் சந்தேக நபர்களை ஊர்காவற்றுறைப் பொலிஸாரிடம் பாரப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. (4-5-18-33-104)



ஊடகவியலாளர்களுக்கான அனர்த்த முகாமைத்துவ முன்னாயத்த கலந்துரையாடல் யாழ்.மாவட்ட செயலகத்தில் யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவி பணிப்பாளர் என்.சூரியராஜா தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

(படம்:-கஜிந்தன், சிவசாந்தன்)



யாழ்.மாவட்ட செயலக ஒளிவிழா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் கணக்காளர் அ.நிர்மல் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

(படம்:-சிவசாந்தன்)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 350 | 360 | 350 |
| உருளைக்கிழங்கு | 160 | 150 | 160 | 180 |
| பச்சைமிளகாய் | 750 | 700 | 900 | 800 |
| தக்காளி | 350 | 300 | 350 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 70 | 60 | 50 |
| கோவா | 280 | 300 | 350 | 240 |
| கரட் | 350 | 460 | 450 | 550 |
| பூசணி | 70 | 70 | 70 | 100 |
| புடோல் | 300 | 250 | -- | 350 |
| வாழைக்காய் | 70 | 70 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 230 | 200 | 150-200 | 320 |
| பெரிய வெங்காயம் | 240 | 240 | 220 | 280 |
| பாகற்காய் | 600 | 400 | 450 | 800 |
| வெண்டிக்காய் | 220 | 200 | 200 | 240 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 110 | 160 |
| பயற்றங்காய் | 400 | 450 | 350 | 400 |
| லீக்ஸ் | 300 | 350 | 300 | 400 |
| பீற்றூட் | 250 | -- | -- | 400 |
| கறிமிளகாய் | 600 | 700 | 750 | 800 |
| முருங்கைக்காய் | -- | -- | -- | -- |
| போஞ்சி | 350 | 350 | 340 | 480 |
| கத்தரிதம்புள்ள | 320 | 300 | -- | 320 |
| கீரை - 1 பிடி | 130 | 100 | 120 | 120 |
| தேசிக்காய் | 300 | 200 | 200 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 85 | 50-80 | 60-80 |
| இராசவள்ளி | 200 | 200 | 200 | 200 |
| வெங்காயப்பூ | -- | 500 | -- | -- |
| முள்ளங்கி | 200 | 160 | -- | 300 |
| பொன்னாங்காணி | 40 | 80 | 100 | 50 |
| வல்லாரை | 30 | 20 | 50 | 40 |
| ஈரப்பலா | 80 | 100 | 80-100 | 120 |

# வர்த்தக சங்கத்தில் அங்கத்துவம் பெறாவிட்டால் சிக்கல் நிலை

## கைத்தொழில் வணிகர் மன்ற தலைவர்

(சாவகச்சேரி)

வர்த்தக சங்கத்தில் அங்கத்துவம் பெறாத வர்த்தகர்களுக்கு எதிர்வரும் காலங்களில் சிக்கல் நிலைமை ஏற்படும் என சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத் தலைவர் ந.சிவபாலன் தெரிவித்தார்.

அண்மையில் சாவகச்சேரி பூமாரி மண்டபத்தில் இடம்பெற்ற வர்த்தகர்களுடனான சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், சாவகச்சேரி நகரில் 400 வர்த்தக நிலையங்கள் இயங்கி வருகின்ற போதிலும் அதில் அரைவாசிப் பேரே சங்கத்தில் அங்கத்தவர்களாக உள்ளனர்.

எதிர்வரும் காலங்களில் சில பொருட்களை வர்த்தகர்கள் பெற்றுக்கொள்ள வர்த்தக சங்கத்தின் சிபாரிசு தேவைப்படலாம். சில பொருட்கள் விநியோகத்திற்கு கட்டுப்பாடுகள் வரவுள்ளன. இந்த நடைமுறைகள் அடுத்த வருடம் கூட நடைமுறைக்கு வரலாம். அதன் போது எமது சங்கத்தில் அங்கத்துவம் வகிப்போருக்கே எம்மால் சிபாரிசு வழங்க முடியும்.

கடந்த காலங்களில் இவ்வாறான செயற்பாடுகள் நடந்துள்ளன. பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவும் போது இந்த நடைமுறை வரும். எனவே புதிய ஆண்டில் ஏனையோரும் வர்த்தக சங்கத்தில் அங்கத்தவர்களாக இணைந்து கொள்ள வேண்டும் என தெரிவித்தார். (4-5-[illegible])

# கருத்தமர்வு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள Zoom செயலி ஊடான "யாவர்க்கும் நலம்" எனும் நிகழ்ச்சித் தொடரானது பிரதி சனிக்கிழமை தோறும் மாலை 7.00 மணி - 9.00 வரை இடம் பெற்று வருகிறது.

அந்த வகையில் இன்று 25 ஆம் திகதி "மகப்பேறின்மை என்ற மாபெரும் சவாலை சமாளிப்பது எப்படி" எனும் தலைப்பில் நடத்தப்படவுள்ள கருத்தமர்வில் ஆலோசனைகளைப் பெறவிரும்புவோர் 6.55 மணிக்கே இணைந்து தங்களின் சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ளுமாறு ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது.

இந்நிகழ்வில் கலந்து கொள்வதற்கான Meeting ID : [illegible] Pass code : [illegible] (4-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கடவுள் நம்மோடு இருக்கிறார்' எனும் உண்மையை கிறிஸ்து பிறப்புவிழா உணர்த்துகிறது



2021 ஆம் ஆண்டின் கிறிஸ்து பிறப்பு பெருவிழா இன மத நிற மொழி வேறுபாடின்றி உலகம் முழுவதிலும் கொண்டாடப்படும் இவ்வேளை முதலில் பாலக இயேசுவின் அன்பும் அருளும் ஆசீரும் என்றும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக என வாழ்த்துகிறோம்.

வாக்கு மனிதனானார் நம்மிடையே குடிகொண்டார் என யோவான் நற்செய்தியாளர் கடவுள் நம்மோடு இருக்கிறார் என்ற உண்மையைத் தெளிவுபடுத்துகிறார்.

கடவுள் என்றும் நம்மோடு இருக்கிறார் என்ற இந்த உண்மையை சிறப்பாக உணர்த்தும் காலம் கிறிஸ்து பிறப்பு விழாக் காலமாகும்.

கடவுள் என்றும் நம்மோடு இருக்கிறார் என்ற இந்த உண்மையையும் கிறிஸ்து பிறப்பின் ஒளியையும் மகிழ்வையும் நம்பிக்கையையும் எமது எந்தத் துன்பமான அல்லது இக்கட்டான அனுபமும் எதுவும் என்றும் ஒருபோதும் குறைத்துவிட முடியாது.

நீங்கள் உங்கள் வீடுகளிலும்பொது இடங்களிலும்அமைக்கும் கிறிஸ்து பிறப்பைச் சித்திரிக்கும் கிறிஸ்மஸ் குடிலும் அதனோடு இணைந்த கிறிஸ்மஸ் மரமும் சோடினைகளும் கடவுள் நம்மோடு இருக்கிறார் என்ற உண்மையான நம்பிக்கையின் அடையாளங்களாக அமையட்டும்.

இந்த அடையாளங்களின் வெளி அர்த்தத்தை தாண்டிச் சென்று அவற்றின் வழியாக வெளிப்படுத்தப்படும் இறை இருப்பையும் இறை அன்பை மனமகிழ்வையும் உங்கள் மனதுகளில் முழுவதுமாக உணர்ந்து இயன்றவரை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளுங்கள். இன்றைய இக்கட்டான நிலையில் உங்களால் இயன்றவரை இயலாமையில் வாடுவோர் - தேவையில் இருப்போர் - துன்பத்தை அனுபவிப்போர் - மருத்துவமனையில் துன்பப்படுவோர் - சிறைச்சாலைகளில் வாடுவோர் போன்ற அனைவருக்கும் அன்புக்கரம் நீட்டுங்கள்.

இந்த பெருவிழாவின் போது உலகம் முழுவதிலும் பல்வேறு மொழிகளிலும் பாடப்படும் ஒரே இறைவார்த்தை உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக. உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக என்பதாகும்.

உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக என்ற வார்த்தைகளை எமதாக்கி வாழ அழைப்பு விடுத்து இறையாசீருடன் கிறிஸ்மஸ் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம்.

**கலாநிதி யஸ்ரின்**
**பேணாட் ஞானப்பிரகாசம்**
**ஆண்டகை யாழ்.ஆயர்.**

# நம்பிக்கையூட்டும் நத்தார் விழா

அஞ்சாதீர்! இதோ எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை அறிவிக்கிறேன் உங்களுக்காக. ஓர் மீட்பர் பிறந்துள்ளார் என இயேசு பாலனின் பிறப்பை சாதாரண பாமர மக்களிடம் தான் முதலில் தெரியப்படுத்தப்பட்டது.

காரிருள் நடுவே கடுங்குளிரிலும் காடுகள் வழியே அலட்சியப்படுத்தாது விரைந்தனர் இடையர் மடமை குடிலில் இயேசுபாலனை கண்டனர் வணங்கினர். அதனையே மக்களிடம் பகிந்தனர். அதுவே நம்பிக்கையூட்டும் நத்தார் விழாவாக இனம், மதம், மொழி, நாடு கடந்து உலகமே கொண்டாடி மகிழ்கின்றனர்.

இன்றும் தம் பொறுப்பை, கடமைகளை உணர்ந்து அடுத்த தலைமுறையினருக்கு எமது செயல்களால் நம்பிக்கையூட்டும் நற்செய்தியாக நாம் பகிர அழைக்கப்படுகிறோம்.

சத்திரத்திலும் இடமில்லாது மாட்டுக் குடிலில் பிறந்து இயேசு பாலன் சரித்திரத்தில் இடம் பிடித்தார் என்பது எமது வாழ்விலும் கற்றுத்தரும் நல்ல செய்தியாக ஏற்றுக்கொள்வோம்.

இன்றைய காலம் பல சவால்கள், தடைகள் இருந்து மீள முடியாமல் தவிக்கும் மக்கள் மனங்களில் நம்பிக்கையூட்டும் நற்செய்தியாக சிறு சிறு பகிர்வால் ஏழைகள் வாழ்வில் மகிழ்வை காண்போம்.

**செ.யோசப்பாலா**
**செயலாளர்,**
**கத்தோலிக்க கலை**
**இலக்கிய வட்டம்.**

## யேசுபாலனை வணங்குவோம் வாருங்கள்

காலையிலே விரியும் தாமரை மலர்போல
காலமெல்லாம் அருளும் சூசைமரி வேந்தே
ஆலையிட்ட கரும்பாய் அவனியிலே ஆனோமே
எல்லையிலா இறைமகனே எல்லாமும் நீர்தானே

உணவாகும் பொன்னிற நெல்மணி கதிர்தானும்
உழுநிலம் சாய்ந்து முத்தமிடும் வைக்கோலில்
கணமெல்லாம் உலகாளும் தேவனாய் வந்தாரே
கரம் கூப்பி வணங்குவோம் எம்முடனே வாருங்கள்.

*"கலாபூஷணம்" கே.ஆர். திருத்துவராஜா*


# அயலவர்களின் பாதைக்கு வழிகாட்டும் பிரகாசமான விண்மீன்களாகுவோம்



ம.பிரான்சிஸ்க் - ஆசிரியர்
யா/மெதடிஸ்த பெண்கள்
உயர்தர பாடசாலை.

"யாக்கோபிலிருந்து விண்மீன் ஒன்று உதிக்கும்! இஸ்ரயேலிலிருந்து செங்கோல் ஒன்று எழும்பும்!

கிறிஸ்து பிறந்த செய்தியை அறிவிக்க தோன்றிய விண்மீன் மிசோ என்னும் பெயர் கொண்டு அழைக்கப்படுவதை கத்தோலிக்க மரபுகளில் நாம் காண்கின்றோம். எந்தவொரு சாதாரண நட்சத்திரத்தாலும் ஒரு மாட்டுத் தொழுவத்திற்கு வழிகாட்ட முடியாது. ஆனால், இந்த விண்மீன பெத்லகேமில் உள்ள பெருமளவான மாட்டுத் தொழுவத்திற்குள் சரியாக இயேசு பிறந்த மாட்டுத்தொழுவத்திற்கு வழி காட்டியது. எனவே இந்த விண்மீன் ஒரு கடவுளின் சம்மனசு, அல்லது இயேசு பிறப்பைக் குறித்துக் காட்ட கடவுள் உருவாக்கிய வேறு ஏதேனும் சிறப்பு அடையாளம் என ஞானிகள் நம்பினர். வட அமரிக்காவின் ஆஸ்டி என்னும் நாட்டில் உள்ள டெக்சாஸ் பல்கலைக்கழகத்தின் கிறிஸ்தவக் கற்கைகளின் பேராசிரியர் பிறன்ர் இலன்டஉ என்பவர் எழுதிய 'ஞானிகளின் வெளிப்பாடு' Revelation of the Magi என்னும் புத்தகத்தில், பெத்லகேமுக்கு ஞானிகளை அழைத்துச் சென்ற பின் பிரகாச ஒளி விசுகின்ற குழந்தையாக மாறிய, (தோன்றிய) அந்த விண்மீன் இயேசு கிறிஸ்துவே எனக் கூறுகின்றார். அத்துடன் திருத்தந்தை 16 ஆம் பெனடிற் பாப்பரசர் இறை வார்த்



தையே அந்த விண்மீனாகத் தோன்றியது என ஒரு முறை குறிப்பிட்டுள்ளார்.

ஜேர்மனியின் கொலோன் நகரில் அச்சிடப்பட்ட ஒரு மத்திய கால புனிதர்களின் நாள் காட்டியில் உள்ள ஒரு பகுதியில்: நற்செய்திக்காக பல சோதனைகள் மற்றும் சோர்வுகளுக்கு ஆளான நிலையில், மூன்று ஞானிகளும் ஆர்மீனியா நாட்டில் சேவா என்னும் இடத்தில் கிறிஸ்மஸ் பண்டிகையைக் கொண்டாட கி.பி. 54 இல் சந்தித்துக் கொண்டார்கள் என்றும் அதன் பின்பு மெல்கியோர் ஜனவரி 01, 116 வயதிலும் காஸ்பர் ஜனவரி 11, 109 வயதில் மற்றும் பால்தாசர் ஜனவரி 06, 112 வயதில் இறந்துள்ளார்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. உரேமின் மரியியல் இத் திகதிகளை ஞானிகளின் வணக்க திருவிழா நாட்கள் எனக் குறிப்பிடுகின்றது.

ஞானிகள் விண்மீன் தோன்றியதைக் கண்டனர். பயணத்தை மேற்கொண்டனர். விண்மீன் இரவில் மட்டுமே கண்ணுக்குத் தெரியும். பகலில் தெரியாது. எனவே ஞானிகள் இரவில் தங்கள் பயணத்தை அதிகம் செய்திருக்க வேண்டும். நாம் வாழும் அவசர உலகில், விண்மீன்களைப் பார்ப்பது மிகவும் அரிது. நமக்கு வானத்தை நிமிர்ந்து பார்க்கக்கூட இப்போது நேரமில்லை. எப்போது வானத்தைப் பார்ப்போம்? நாம் வானத்தில் கருமேகங்கள் சூழும் போது சந்தேகத்தோடு "ஒரு வேளை மழை வருமோ?" என நிமிர்ந்து வானத்தைப் பார்க்கிறோம். அதேபோல், நாம், எம் உள்ளங்களில் கருமேகங்கள் சூழும் போதும் மீண்டும் வானத்தைச் சந்தேகத்தோடு பார்க்கிறோம்.


கடவுள் என்ற ஒருவர் அங்கிருக்கிறாரா? என்பதைத் தெரிந்து கொள்ள சந்தேகம் வரும் போது மட்டும் வானத்தைப் பார்த்தால், அங்கே கரு மேகங்கள் மட்டுமே தெரியும். அந்தக் கரு மேகங்களுக்குப் பின் கண்சிமிட்டும் விண்மீன்கள் தெரியாது. அந்த விண்மீன்கள் இறைவனிடம் நம்மை அழைத்துச்செல்ல தரும் அழைப்புக்கள் தெரியாது. நம் வாழ்க்கையில் உண்மை விண்மீன்கள் தொலைந்து போகும் போது மனதின் அந்த வெற்றிடத்தை நிரப்ப மற்ற போலியான விண்மீன்கள் ஆக்கிரமித்து விடுகின்றன. இன்று நாம் சிந்திக்கும் இந்த ஞானிகள் எத்தனை இரவுகள் எத்தனை இடர்பாடுகள் மத்தியில் விண்மீனைத் தொலைத்து விட்டு வேதனை பட்டிருப்பார்கள்? இருந்தாலும் இறுதி வரை மனம் தளராமல் ஒரே குறிக்கோளுடன் மன உறுதியுடன் இரவின் துணையில் பல ஆயிரம் மைல்கள் பயணத்தைத் தொடர்ந்தார்கள், இந்த விண்மீன் விடிவெள்ளியாகிய இயேசு எங்கு இருக்கின்றார் என்ற பாதையினைக் அவர்களுக்கு காட்டிக் கொடுத்தது. இலக்கை அடைந்தார்கள்.

கடவுளைக் கண்டார்கள். நாமும் கடவுளைக் காண நம் வாழ்க்கைப் பாதையை இறை வார்த்தையின் வழியில் அமைப் போம். இன்று பாதை அறியாமல் அலைகின்றவர்களுக்கு பாதை காட்டும் விண்மீனாகுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயிரம் பேருடன் பயணித்த கப்பலில் தீ விபத்து

## ✶ 32 பேர் உயிரிழப்பு
## ✶ 100 பேருக்கு மேல் காயம்




(டாக்கா)

பங்களாதேஷில் சுமார் ஆயிரம் பேரை ஏற்றிச் சென்ற கப்பலொன்று தீ விபத்துக்குள்ளானதில் சுமார் 32 பேர் வரை உயிரிழந்துள்ளதாகவும் 100 பேர் வரை காயமடைந்துள்ளதாகவும் அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தலைநகர் டாக்காவில் இருந்து தெற்கே 200 கி.மீ. தொலைவில் ஜலோகாட்டி மாவட்டத்தில் உள்ள ஆற்றில் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

தீ விபத்தில் காயமடைந்தவர்களில் சிலர் ஆபத்தான கட்டத்தில் உள்ளதனால் உயிரிழப்புகள் அதிகரிக்கக் கூடும் என்றும் அஞ்சப்படுகிறது. (நி-5)

# 100 இற்கும் மேற்பட்ட வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்து



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் விஸ்கான்சினில் அமைந்துள்ள நெடுஞ்சாலையொன்றில் 100 இற்கும் மேற்பட்ட வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

மேற்கு-மத்திய விஸ்கான்சினில் தொடரும் பனிபடர்ந்த நிலைமை காரணமாக இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இந்த விபத்து இடம்பெற்றது. (நி-5)

# உருமாறியது ஒமிக்ரோன்?

(ஜெனிவா)

டெல்டா, ஒமிக்ரோன் கலவையால் உருமாற்றம் அடைந்து புதிய கொரோனா வைரஸ் உருவாகி உள்ளது.

இந்த கொரோனா வைரசுக்கு 'டெல்மைக்ரான்' என்று பெயரிடப்பட்டுள்ளது.

டெல்மைக்ரான் வைரசால் அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளில் சுனாமி போன்று கொரோனா அலைகள் ஏற்படக்கூடும். புதிய வைரஸ் ஒமிக்ரோனை விட மிகமிக வேகமாகப் பரவக்கூடியது.

ஆனாலும் புதிய உருமாறிய வைரஸ் குறித்து உலக சுகாதார அமைப்பு இது வரை அதிகாரபூர்வமாக எந்த அறிவிப்பையும் வெளியிடவில்லை. (நி-5)

# தாழ்மையுடன் நடப்பவர்கள்
## எதிர்காலத்தின் மீது அக்கறையுடையவர்கள்

(வத்திக்கான்)

'கிறிஸ்மஸ் பண்டிகை காலத்தில் தாழ்மையுடன் நடந்து கொள்ளுங்கள். தற்பெருமை, தன்னலம், கவசத்தின் மினுமினுப்பு உங்கள் ஆன்மிக வாழ்க்கையை சிதைத்து தேவாலயத்தின் பணியை சீர்குலைத்து விடுகிறது என போப் பிரான்சிஸ் தெரிவித்தார்.



நத்தார் பண்டிகையை முன்னிட்டு அவர் ஆற்றிய உரையில் இவ்வாறு தெரிவித்தார்.

தாழ்மை உள்ளவர்கள் கடந்த காலத்தைப்பற்றி மட்டுமல்லாமல் எதிர்காலத்தின் மீதும் அக்கறை கொண்டவர்கள். ஏனென்றால் அவர்களுக்கு முன்னோக்கிப் பார்க்கவும் தங்கள் கிளைகளை பரப்பவும் கடந்த காலத்தை நன்றியுடன் நினைவில் கொள்ளவும் தெரியும் என அவர் தெரிவித்தார். (நி-5)

## புகையிரத ஊழியர்கள்
# பயணச்சீட்டு வழங்குநர்கள் பகிஷ்கரிப்பு
# மக்கள் இலவசமாக பிரயாணம்

(கொழும்பு)

புகையிரத ஊழியர்கள் பயணச்சீட்டு வழங்கும் பணியினை இடைநிறுத்தி நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் தொழிற்சங்கப் போராட்டம் ஒன்றினை முன்னெடுத்துள்ளனர்.

20 இற்கு மேற்பட்ட கோரிக்கைகளை முன்வைத்து குறித்த போராட்டம் நடைபெற்ற போதிலும் புகையிரத பயணிகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை.

நேற்று புகையிரதத்தில் இலவசமாக பயணிக்கும் வாய்ப்பு கிடைத்துள்ளதாக பயணிகள் தெரிவித்தனர். (நி-5)

# விலையேற்றத்தை கண்டித்து தீப்பந்தம் ஏந்தி ஆர்ப்பாட்டம்



(கொழும்பு)

அத்தியாவசிய பொருட்கள் மற்றும் எரிபொருள் விலையேற்றத்தை கண்டித்தும் மக்களுக்கு நிவாரணம் வழங்குமாறும் வலியுறுத்தியும் கினிகத்தேனையில் ஐக்கிய மக்கள் சக்தியின் ஆதரவாளர்கள் ஒன்றிணைந்து தீப்பந்தம் ஏந்தி அரசாங்கத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டம் ஒன்றை நேற்று முன்தினம் இரவு கினிகத்தேனை பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக நடத்தினர்.


ஆர்ப்பாட்டத்தின் போது 'அமைச்சர்கள் சொகுசு வாகனங்களில், அப்பாவி மக்கள் எண்ணெய் சட்டிக்குள், போதும் போதும் அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புவோம், விலை ஏற்றி ஏழைகளின் வயிற்றில் அடிக்காதே போன்ற கோஷங்களை எழுப்பியவாறு ஆதரவாளர்கள் தமது எதிர்ப்பை வெளிக்காட்டினார்கள். (நி-5)

# டெங்கு நோயாளர்களின் வீதம் அதிகளவில் அதிகரிப்பு
## தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு

(கொழும்பு)

15 மாவட்டங்களில் கண்டறியப்பட்ட டெங்கு நோயாளர்களின் வீதத்தில் பாரிய அதிகரிப்பு காணப்படுவதாகவும் மேல் மாகாணத்தில் அதிகளவானோர் பதிவாகியுள்ளதாகவும் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது. இந்த வருட காலப் பகுதியில், நாட்டில் 33 ஆயிரத்து 269 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

கண்டி, காலி, யாழ்ப்பாணம், அம்பாந்தோட்டை, மன்னார், மட்டக்களப்பு, புத்தளம், திருகோணமலை, பதுளை, இரத்தினபுரி, கேகாலை மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களிலும் கணிசமான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது. (நி-5)



மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் புதிய நீதியரசராக விக்கும் அதுல களுஆரச்சி நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் தேவிகா அபேரத்ன ஓய்வுபெற்றுச் செல்லும் நிலையில் ஏற்பட்டுள்ள வெற்றிடத்துக்கே விக்கும் அதுல களுஆரச்சி நியமிக்கப்பட்டுள்ளார்.

# பட்டாசு விற்பனையில் கணிசமான வீழ்ச்சி

(கொழும்பு)

பண்டிகைக் காலத்தில் பட்டாசு விற்பனையில் கணிசமான வீழ்ச்சியை அவதானிக்கக்கூடியதாக உள்ளதென கிம்புலாபிட்டி பாரம்பரிய சிறு மற்றும் மத்திய அளவிலான பட்டாசு உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர்.

மூலப் பொருட்களின் விலை அதிகரிப்பு காரணமாக, தற்போது பட்டாசு உற்பத்தி தொழிற்றுறை நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளதாக அவர்கள் குறிப்பிட்டனர்.

வழமையாக வருடத்தின் இந்த காலப்பகுதியில், வெளிப் பிரதேசங்களில் இருந்து பட்டாசுகளைக் கொள்வனவு செய்வதற்காக கிம்புலபிட்டி பகுதிக்கு பெருமளவான மக்கள் வருகின்றபோதிலும் இந்த முறை அந்த நிலைமையைக் காணக்கூடியதாக இல்லை என பட்டாசு உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசிபலன்

**25.12.2021**
**மார்கழி 10, சனிக்கிழமை**
**சஷ்டி பிற்பகல் 4.44 மணிவரை**
**பூரம் பின்னிரவு 2.03 மணிவரை**
**சுபநேரம்- 3.26-4.56 மணிவரை**
**இராகு காலம்- 9.26-10.56 மணிவரை**
**சந்திராஷ்டமம், திருவோணம், அவிட்டம்**
**நத்தார் பண்டிகை** **வளவன்**


மேஷம்

தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வழிபாடு ஆனந்தம் தரும்.


ரிஷபம்

தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் , பயணங்களால் பலனுண்டு.


மிதுனம்

பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகலாம், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.


கடகம்

தொலை தூரத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், வாக்கு மேன்மையுண்டு, போசன சுகமுண்டு.


சிம்மம்

குடும்பத்தில் பொறுப்புக்களும் சுமைகளும் அதிகரிக்கலாம், வழிபாட்டால் மகத்துவம் காணும் நாள், போசன சுகமுண்டு, புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.


கன்னி

எடுத்த காரியங்களில் சற்று அலைச்சல்கள் ஏற்படலாம், சுப செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், ஆரோக்கியத்தில் கொஞ்சம் அக்கறை தேவை.


துலாம்

ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், காரிய அனுகூல முண்டு.


விருச்சிகம்

தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள்.


தனுசு

வீண்பழிகள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள், மருத்துவச் செலவுகள் குறைந்து மன நிம்மதி கிடைக்கும், புதிய முயற்சிகள் கைகூடும்.


மகரம்

உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், எந்தக் காரியத்தையும் பலமுறை யோசித்து செய்வது நல்லது, விரயங்கள் கூடும்.


கும்பம்

இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், தொழில் வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், போசன சுகமுண்டு.


மீனம்

உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு.

எங்கே நம்பிக்கை இருக்கிறதோ அங்கே கீழ்ப்படிதல் இருக்கும்.

# இராணுவம் என தெரிவித்து மோ.சைக்கிள் அபகரிப்பு

(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தருமபுரம் பகுதியில் நேற்றைய தினம் ஒருவர் தான் இராணுவம் எனவும் அவசர மாக மோட்டார் சைக்கிள் தேவைப்படுவ தாகவும் தெரிவித்து நபர் ஒருவரின் மோட்டார் சைக்கிளை வாங்கி சென்று ள்ளார்.

மோட்டார் சைக்கிள் உரிமையாளர் நீண்ட நேரமாக மோட்டார் சைக்கிளில் சென்றவரை காணவில்லை என்ற சந்தேகத்தில் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்தார்.

முறைப்பாட்டிற்கமைய பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4-5-316)

## வாள்வெட்டுடன் தொடர்புடைய மூவர் கைது

(கரணவாய்)

வடமராட்சி கரவெட்டி மேற்கில் இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்துடன் தொடர்புடைய மூவரை நெல்லியடி பொலிஸார் தேடி வந்த நிலையில் நேற்று முன்தினம் மூவரும் கைது செய்யப்பட்ட னர்.

கைது செய்யப்பட்டவர்களை பருத்தித்துறை நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோது மூவரையும் பிணையில் செல்ல உத்தரவிட்டார்.

மூவரையும் மீண்டும் ஜனவரி 15 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறும் நீதிவானால் கட்டளை பிறப்பிக்கப்பட்டது. (5-4-60)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(குப்பிழான்)

குப்பிழான் விக்கினேஸ்வரா சனசமூக நிலையத்தின் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல்-03.30 மணியளவில் மேற்படி சனசமூக நிலைய மண்ட பத்தில் இடம்பெறவுள்ளது என நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (4-5-18)

# கழிவகற்றும் வாகனத்தில் தீப்பிடிப்பு

(நெளுக்குளம்)

வவுனியா நகரசபைக்கு சொந்தமான கழிவு அகற்றும் உழவியந்திரத்தின் பெட்டி நேற்று அதிகாலை தீப்பிடித்து எரிந்துள்ளது. நேற்று காலை பணிக்கு சென்ற ஊழியர் ஒருவர் குறித்த குப்பை அகற் றும் வாகனம் தீப்பிடித்து எரிந்து கொண் டிருந்ததை அவதானித்து தீயணைப்பு பிரிவிற்கு அறிவித்தார்.

பின்னர் நகரசபை தீயணைப்பு வாகனத்தின் உதவியுடன் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. தீ விபத்தில் வாகனத்தில் இருந்த கழிவு கள் எரிந்துள்ளதுடன் வாகனத்தின் பெட்டியும் சேதமடைந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் சி.சி.ரி.வி கமராவின் உதவியுடன் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (4-5-299)



## திரு.ஜெ.சத்தியேந்திரன்

**ஓய்வுநிலை உதவிப் பிராந்திய முகாமையாளர் தென்னைப் பயிர்ச்செய்கைச்சபை அவர்களின் மணி விழாவும், "தென்னைகளுக்கிடையில் ஊடுபயிராக கமுகு (பாக்கு) செய்கை" எனும் நூல் வெளியீட்டு விழாவும்.**

**இடம் : திவ்ய ஜீவன சங்க மண்டபம்**
பருத்தித்துறை வீதி, (சட்டநாதர் கோயில் அருகாமை)
கல்வியங்காடு, நல்லூர்.
**காலம்: 26.12.2021**
**நேரம்: காலை 9.30 மணி**

தலைவர் : திரு.ச.சிவநேசன்
ஓய்வுநிலை உதவி விவசாயப் பணிப்பாளர்,
விவசாயத் திணைக்களம், யாழ்ப்பாணம்.

**பிரதம விருந்தினர்கள்:**
- திரு.M.பிரதீபன் யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.
- திரு.சி.சிவகுமார் மாகாணப் பணிப்பாளர் (வடக்கு)-விவசாயத் திணைக்களம், யாழ்ப்பாணம்.

**கௌரவ விருந்தினர்கள்:**
- திருமதி. அஞ்சனா சிறிறங்கன், பிரதி விவசாயப் பணிப்பாளர், விவசாயத் திணைக்களம், திருநெல்வேலி.
- திரு.சி.தனீஸ்வரன் முகாமையாளர் தேசிய சேமிப்பு வங்கி, யாழ்ப்பாணம்.

**சிறப்பு விருந்தினர்கள்**
- திரு.B.லோகநாதன் பொதுமுகாமையாளர் பனை அபிவிருத்திச் சபை, யாழ்ப்பாணம்.
- திரு. J.அமலேந்திரன் பிரதம பொறியியலாளர் (வடக்கு) மின்சார சபை, யாழ்ப்பாணம்.

நூல் அறிமுகம்: தென்னைகளுக்கிடையில் ஊடுபயிராக கமுகு (பாக்கு) செய்கை
திரு.ஜெ.சத்தியேந்திரன் (J.P) (நூல் ஆசிரியர்)
ஓய்வுநிலை உதவிப்பிராந்திய முகாமையாளர், தென்னைப்பயிர்ச் செய்கை சபை, யாழ்ப்பாணம்.
இந்நூலினை யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் வெளியிட்டு வைப்பார்.
நூல் வெளியீட்டு நிகழ்வும் விசேட இலவச பிரதிகள் வழங்கல் நிகழ்வும் கௌர, சிறப்பு, பிரதம விருந்தினர்கள் உரையும் இடம்பெறும்.
மதிப்பீட்டு உரை: திரு.சி.சிவகுமார்
மாகாணப்பணிப்பாளர் (வடக்கு) விவசாயத்திணைக்களம் யாழ்ப்பாணம்.
தமிழில் முதலில் வெளிவந்த நூல் ஒன்றின் விலை: 600 ரூபா


குறிப்பு: எதிகாலத்தில் தென்னை அபிவிருத்தி சம்பந்தமாக தென்னந் தோட்டங்களைப் பார்வையிட்டு இலவச ஆலோசனைகளைப் பெற விரும்புவோர் 077 505 6263 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

(9216) **விழா ஏற்பாட்டுக் குழு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்கழி மாத இராசி பலன்கள்

## 16.12.2021 - 13.01.2022



**எதையும் உற்சாகத்துடன் செயற்படுத்தி வெற்றி காணும் தனுசு இராசி வாசகர்களே!**

மார்கழி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் குரு சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். உங்கள் இராசியிலேயே 9 இற்கு அதிபதி சூரியனும், 10இற்கு அதிபதி புதனும் இணைந்து சஞ்சரித்து தர்ம கர்மாதிபதி யோகத்தை உருவாக்குகிறார்கள். எனவே எண்ணங்கள் ஈடேறும். அரசு வழியில் அனுகூலம் உண்டு. பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். புதிய பொறுப்புக்களும் கிடைக்கும்.

**சகாய ஸ்தானத்தில் குரு**

மாதத் தொடக்கத்தில் சகாய ஸ்தானத்தில் குரு பகவான் சஞ்சரிக்கின்றார். அவரது பார்வை உங்கள் இராசிக்கு 7, 9, 11 ஆகிய மூன்று இடங்களில் பதிவாகின்றது. எனவே கல்யாணம் போன்ற சுபகாரியங்கள் நடைபெறுவதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளன. ஏழரைச் சனியால் பெரியளவில் பாதிப்புகள் ஏற்படாது என்றாலும் ஆரோக்கியத்தில் மட்டும் அச்சுறுத்தல்கள் வந்து கொண்டேயிருக்கும். பணி புரியும் இடத்தில் இருந்த பிரச்சினைகள் படிப்படியாக அகலும். பொதுவாழ்வில் நினைத்த இலக்கை அடைவீர்கள்.

**மகர புதனின் சஞ்சாரம்**

மார்கழி 12 ஆம் திகதி மகர இராசிக்குப் புதன் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 7, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் குடும்ப ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போவதால் கல்யாணம் போன்ற சுபகாரியங்களில் இருந்த தடைகள் அகலும். வீடுகட்டும் முயற்சி, கட்டிய வீட்டை பழுதுபார்க்கும் முயற்சி, சொத்துக்கள் வாங்குவது போன்ற சுபச்செலவுகளை மேற்கொள்ளும் சூழ்நிலை உருவாகும். வேலையில் இருப்பவர்கள் 'விருப்ப ஓய்வில் வெளிவந்து சுய தொழில் தொடங்கலாமா?' என்று சிந்திப்பர். பெற்றோரின் உடல்நலத்தில் கொஞ்சம் கவனம் தேவை.

**தனுசு சுக்கிரனின் சஞ்சாரம்**

மார்கழி 25 ஆம் திகதி தனுசு இராசிக்குச் சுக்கிரன் வக்கிர இயக்கத்தில் வருகிறார். உங்கள் இராசிக்கு 6, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். எனவே அவர் ஜென்மத்தில் சஞ்சரிக்கும் பொழுது உத்தியோகத்தில் நல்ல மாற்றங்கள் வரலாம். அரசு வேலைக்காக முயற்சி செய்தவர்களுக்கு அது கிடைக்கக் கூடிய வாய்ப்பு உண்டு. ஆடை, ஆபரணம் வாங்கி மகிழ்வீர்கள். உற்சாகமும் தன்னம்பிக்கையும் உள்ளத்தில் குடிகொள்ளும்.




எதிர்பாராத விதத்தில் வரவேண்டிய பாக்கிகள் கூட வசூலாகலாம்.

## பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும்

**தனுசு புதனின் சஞ்சாரம்**

மார்கழி 27 ஆம் திகதி தனுசு இராசிக்குப் புதன் வக்கிர இயக்கத்தில் செல்கிறார். இக்காலத்தில் தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். தொல்லை தந்த எதிரிகள் விலகுவர். நண்பர்கள் நல்ல தகவலைக் கொண்டு வந்து சேர்ப்பார். உறவினர்கள் உங்கள் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவர். விலகிச்சென்ற சொந்தங்கள் விரும்பி வந்திணைவர்.

குடும்பத்தில் உள்ளவர்களின் குறைகளைத் தீர்க்கச் செலவு செய்வீர்கள். தொழில் போட்டிகள் அகலும். உங்கள் மேற்பார்வையில் உள்ள நிறுவனங்கள் விருத்தியடையும். தள்ளிப்போன வாய்ப்புகள் பலவும் தானாக வந்து சேரும் நேரமிது. இம்மாதம் சூரிய வழிபாடு சுகங்களை வழங்கும்.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் நினைத்தது நிறைவேறும். நீண்ட நாட்களாக நடைபெறாத காரியங்கள் துரிதமாக நடைபெறும். கணவன்-மனைவி ஒற்றுமை பலப்படும். வாழ்க்கைத் துணை மற்றும் பிள்ளைகளுக்கு வேலை கிடைத்து உதிரி வருமானங்கள் கிடைக்கலாம். பணிபுரியும் பெண்களுக்கு வேலைப்பளுவின் காரணமாக விருப்ப ஓய்வில் வெளிவந்து சுயதொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும் மாதம் இது.

**ஜோதிடக் கலாமணி**
**சிவல்புரி சிங்காரம்**



**மற்றவர்களின் கவனத்தை ஈர்க்கும் விதத்தில் பேசும் மகர இராசி வாசகர்களே!**

மார்கழி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சனி உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கின்றார். ஏழரைச் சனியில் ஜென்மச் சனியின் ஆதிக்கம் நடைபெறுகிறது. விரய ஸ்தானத்தில் சூரியனும், புதனும் சஞ்சரிக்கின்றார்கள். அதே நேரத்தில் இலாப ஸ்தானத்தில் இலாபாதிபதி செவ்வாய் பலம் பெற்றிருக்கின்றார். எனவே தேவைக்கேற்ற பணம் வந்து கொண்டேயிருக்கும். திடீர் இடமாற்றங்கள், வீடுமாற்றங்கள் ஒருசிலருக்கு ஏற்படலாம். கேதுவின் பார்வை இராசியில் பதிவதால் புது முயற்சியில் ஈடுபடும் பொழுது அனுபவஸ்தர்களையோ, அருளாளர்களையோ கலந்து ஆலோசித்துச் செய்வது நல்லது.

**தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குரு**

மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிக்கு இரண்டாம் இடமான தன ஸ்தானத்தில் குரு பகவான் சஞ்சரிக்கின்றார். 3, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு. சகோதர ஸ்தானத்திற்கு அதிபதியாகவும், விரயாதிபதியாகவும் விளங்கும் குரு 2 இல் சஞ்சரிக்கும் பொழுது உடன்பிறப்புகளின் வழியிலும், உடன் இருப்பவர்களின் வழியிலும் செலவுகள் ஏற்படலாம். இல்லத்திற்குத் தேவையான அத்தியாவசியப் பொருள் மற்றும் ஆடம்பரப் பொருட்களை வாங்கும் முயற்சி கைகூடும். பயணங்கள் அதிகரிக்கும்.

**மகர புதனின் சஞ்சாரம்**

மார்கழி 12 ஆம் திகதி மகர இராசிக்குப் புதன் செல்கின்றார். இதன் விளைவாக 6, 9 இற்கு அதிபதியான புதன் உங்கள் இராசியில் சஞ்சரிக்கும் பொழுது உத்தியோகத்தில் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். புதிய வேலைக்கு விண்ணப்பித்தவர்களுக்கு அது கிடைக்கும். பாகப்பிரிவினைகள் இப்பொழுது முடிவடையும். வாடகைக் கட்டடத்தில் இதுவரை குடியிருந்த நீங்கள் இப்பொழுது சொந்தக் கட்டடத்திற்கு மாறும் முயற்சி கைகூடும்.

**தனுசு சுக்கிரனின் சஞ்சாரம்**

மார்கழி 25 ஆம் திகதி தனுசு இராசிக்குச் சுக்கிரன் வக்கிர இயக்கத்தில் வருகின்றார். உங்கள் இராசிக்கு 5, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் விரய ஸ்தானத்தில் வரும் பொழுது பணிபுரியுமிடத்தில் சில




பிரச்சினைகள் ஏற்படலாம்.

பேச்சாற்றல் மிக்க ஒருவர் உங்களுக்குப் பின்னணியாக இருந்து பிரச்சினைகள் தீர வழிகாட்டுவர். ஆரோக்கியத்தில் குறைபாடு ஏற்படும் போது உடனே மருத்துவ ஆலோசனைகளை பெறுவது நல்லது.

## தேவைக்கேற்ற பணம் வந்து கொண்டேயிருக்கும்

**தனுசு புதனின் சஞ்சாரம்**

மார்கழி மாதம் 27 ஆம் திகதி தனுசு இராசிக்குப் புதன் வக்கிர இயக்கத்தில் வருகின்றார். உங்கள் இராசிக்கு 6, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் வக்கிரம் பெறும்பொழுது எதிலும் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். பங்காளிப் பகை உருவாகும். மற்றவர்களின் பிரச்சினைகளில் தலையிடுவதன் மூலம் வீண் பழிச் சொற்கள் ஏற்படும்.

முன்கோபத்தின் காரணமாக முன்னேற்றப் பாதிப்புகளும் உருவாகலாம். கோபத்தை குறைத்துக் கொண்டு செயற்படுவதன் மூலமே மன அமைதியைக் காண இயலும். சந்தர்ப்பங்கள் சாதகமாக இருந்தாலும் அதை உபயோகப்படுத்திக் கொள்ள இயலாது. இம்மாதம் சனீஸ்வரர் வழிபாடு சந்தோஷத்தை வழங்கும்.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் ஜென்மச் சனியின் ஆதிக்கம் நடைபெறுவதால் விரயங்கள் அதிகரிக்கும். வீடு மாற்றங்கள் உருவாகலாம். எதையும் சிந்தித்து செயற்படுவது நல்லது.

குடும்பச்சுமை கூடும். கணவன் - மனைவி உறவில் ஒரு வரை ஒருவர் அனுசரித்துச் செல்வதன் மூலமே அமைதி காண இயலும். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்வது நல்லது. பணிபுரிபவர்களுக்கு சகப் பணியாளர்களால் தொல்லை உண்டு. கேட்ட சலுகை கிடைக்காது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைய எண் முறைமைகளும் பழந்தமிழரின் அளவை முறைகளும்-பகுதி II

40

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



### எழுத்துரு மாற்ற வரலாறு

எழுத்து என்பது ஒரு மொழியின் அடிப்படைக் கூறு ஆகும் என்றோம். மொழிக்கு நிலைபேறு அளிப்பது எழுத்தாகும். ஒலி வடிவத்திற்கு வரிவடிவம் கொடுப்பது எழுத்து என்பர். எழுதப்படுவதனால் எழுத்து எனப் பெயர் பெற்றது. தமிழ்மொழி என்பது செம்மொழியாகவும் பண்டைய காலம் தொட்டே சிறந்த இலக்கண, இலக்கியங்கள் பெற்ற மொழியாகவும் உள்ளது.

அவ்வாறான தமிழ் எழுத்துக்கள் படிப்படியாக சில மாறுதல்களைப் பெற்றே இன்றைய எழுத்து மொழியாக உருவம் பெற்றிருக்கின்றன. 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ் எழுத்துக்கள் இந்தியாவிலுள்ள குற்றாலம் தொல்லியல் அருங்காட்சியகத்தில் உள்ளன. அது படத்தில் காட்டப்பட்டுள்ளது.

### எழுத்துகளின் வளர்ச்சி நிலைகள்

எழுத்துகளின் வளர்ச்சியை, சித்திரவெழுத்து, தன்மையெழுத்து, உணர்வெழுத்து, ஒலியெழுத்து என நான்காகக் கொள்ளலாம். இதனை நன்னூல், எழுத்தியல் ஈற்றுச் சூத்திர உரையில் மயிலைநாதர் என்னும் உரையாசிரியர் விளக்கமாகக் கூறியுள்ளார். உருவெழுத்து (சித்திர எழுத்து முறை) சிந்துவெளித் திராவிடரிடம் இருந்தது. இவற்றைப் பழைய எகிப்தியரும் பாபிலோனியரும் வழங்கினர் என்று கூறப்படுகிறது.

**எழுத்துகளின் வளர்ச்சியை, சித்திரவெழுத்து, தன்மையெழுத்து, உணர்வெழுத்து, ஒலியெழுத்து என நான்காகக் கொள்ளலாம். சித்திரவெழுத்து சிந்துவெளித் திராவிடரிடம் இருந்தது. இவற்றைப் பழைய எகிப்தியரும் பாபிலோனியரும் வழங்கினர் என்று கூறப்படுகிறது. காது என்கிற சொல்லை எழுதாமல் காதின் உருவத்தை வரைவது போன்றது. உணர்வெழுத்து என்பது குறியினாலுணரப்படும் ஒருவகையெழுத்து. இது சீனர்களின் பண்டைய எழுத்து முறையாகும். தன்மை எழுத்து என்பது, எழுத்துகளை உச்சரிக்கும்போது இருக்கும் வன்மை, மென்மை போன்ற தன்மைகளும், அவை சேர்ந்து சொல்லாகும் போது ஏற்படும் தன்மைகளையும் குறிக்கும். தன்மையெழுத்து எகிப்தியர்களிடம் காணப்பட்டதாகும். ஒலியெழுத்து என்பது ஒலிக்கு வடிவம் தந்து எழுதப்படுவது. அதாவது ஒலி எழுத்து என்பது எழுதப்பட்ட குறியீடுகளுக்கு உரிய ஒலியை மீண்டும் உச்சரிக்கத் தோன்றுவது.**



2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ் எழுத்துக்கள், குற்றாலம் தொல்லியல் அருங்காட்சியகம் (நன்றி- விக்கிப்பீடியா)

காது என்கிற சொல்லை எழுதாமல் காதின் உருவத்தை வரைவது போலும், மரம், சூரியன் இச்சொற்களை எழுதுவதற்குப் பதில் அவற்றின் உருவத்தை வரைந்து விடுவது போலும் அமைந்தவை உருவ எழுத்துகளாகும்.

உணர்வெழுத்து (குறியினாலுணரப்படும் ஒருவகையெழுத்து) என்பவை சீனர்களின் பண்டைய எழுத்து முறையாகும். நாம், நமக்கு மட்டுமே பார்க்கவும் புரிந்து கொள்ளவும் அமைத்துக் கொள்ளும் ஒருசில குறியீடுகளின் பொருள் நமக்குப் புரியலாம். அதேநேரம் அதை மற்றவர் உணர முடியாது போனால் அது உணர்வெழுத்து ஆகாது.

தன்மை எழுத்து என்பது, எழுத்துகளை உச்சரிக்கும்போது இருக்கும் வன்மை, மென்மை, போன்ற தன்மைகளும் அவை சேர்ந்து சொல்லாகும் போது ஏற்படும் தன்மைகளையும் குறிக்கும். தன்மையெழுத்து எகிப்தியர் களிடம் காணப்பட்டதாகும். அவர்கள் அறிவு நுட்பத்திற்கு கண்ணும் எறும்பும், அறிவின்மைக்கு ஈயும், நன்றியின்மைக்கு விரியன் பாம்பும், வெற்றிக்குக் கருடனும் போன்றவற்றை பாவித்தனர்.

ஒலியெழுத்து என்பது ஒலிக்கு வடிவம் தந்து எழுதப்படுவது. அதாவது ஒலி எழுத்து என்பது எழுதப்பட்ட குறியீடுகளுக்கு உரிய ஒலியை மீண்டும் உச்சரிக்கத் தோன்றுவது. 'தமிழ்' என்ற இந்தச் சொல்லை நீங்கள் ஒலித்தீர்கள் என்றால், இங்கு, நான் மனதில் நிலைத்து எழுத்தில் பதிந்த குறியீட்டிற்கான அதே ஒலியை மீண்டும் நீங்கள் உச்சரித்திருப்பீர்கள். ஓர் ஒலிக்கு ஓர் எழுத்து என உருவான நிலையை ஒலி எழுத்து நிலை என்பர். இவ்வெழுத்துக் களுக்கே தொல்காப்பியம் முதலான இலக்கண நூல்கள் இலக்கணம் கூறுகின்றன.


### கண்ணெழுத்து

பழங்கால தமிழகத்தில் ஏற்றுமதியாளர்கள் பண்டப் பொதிகளின் மீது சரக்கின் பெயரையும், அளவையும் படமாக வரைந்தனுப்பிய செய்தி சிலப்பதிகாரத்தில் உள்ளது. இவ்வாறு அடையாளம் காட்டி எழுதப்படுவது கண்ணெழுத்து எனப்படுகிறது. அரசு கடிதங்களுக்கு மன்னர்களின் திருமுகங்களை மறை வடக்கமாக முத்திரையிட்டு அனுப்பினர். சிலப்பதிகார மாதவியும், சீவக சிந்தாமணி காந்தருவதத்தையும் இவ்வாறு தங்கள் கடிதங்களுக்கு முத்திரையிட்டு அனுப்பினர். எனவே கண்ணெழுத்து என்பது அடையாள எழுத்து அல்லது குறியீட்டெழுத்து எனலாம். அரசனது திருமுகங்களை எழுதி அதன் மேல் அரச முத்திரையிடுவோர் கண்ணெழுத்தாளர் எனப்பட்டனர்.

**சித்திர எழுத்து** (Hieroglyph)



சித்திர எழுத்து என்பது, பண்டைய எகிப்தியர்கள் கோயில்கள், தூண்கள், நினைவுச் சின்னங்கள் போன்றவற்றில் வெட்டிய, செதுக்கிய, அல்லது வரைந்த எழுத்துக்களாகும்.




(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அரண்மனைக் கோமாளி

"நன்றி கெட்டவனே! உனக்கு எவ்வளவு மதிப்பு தந்தேன்? நேற்று எல்லோரையும் சிரிக்க வைப்பதாக நினைத்து என்னை அவமானப் படுத்தி விட்டாய்.

இனிமேல் இப்படிச் சிரிக்க வைக்க நீ உயிருடன் இருக்கப் போவதில்லை. உன்னைக் கொல்லப் போகிறேன்" என்று கோபத்துடன் கத்தினார் அரசர்.

"அரசே! நான் உங்களை அவமானப் படுத்துவேனா? நகைச்சுவைக்காக அப்படிப் பேசினேன். என்னை மன்னித்து விடுங்கள்" என்று கெஞ்சினான்.

"நீ பேசியதைக் கேட்டது போதும். இனி உன் பேச்சை யாரும் கேட்கப்போவதில்லை" என்ற அவர் காவலாளி ஒருவனைப் பார்த்தார்.

"வீதியில் திரியும் நாய் ஒன்றை இங்கே இழுத்து வா" என்றார். எலும்பும் தோலுமாக இருந்த நாய் ஒன்றைப் பிடித்து, இழுத்துக் கொண்டு வந்தான்.



தெரு நாயை அரசர் ஏன் இழுத்துவரச் சொன்னார் என்பது விதூஷகன் வரதனுக்கு புரியவில்லை.

"அந்த நாயை வைத்து அவர் என்ன தண்டனை தரப் போகிறார்? ஒன்றும் புரிய வில்லையே" என்று எல்லோரும் குழம்பினர்.

"முட்டாளே! இந்தத் தெரு நாய்க்கும், உனக்கும் அதிக வேறுபாடு மில்லை. இந்த நாயை எங்கள் கண் முன்னால் நீ கொல்ல வேண்டும். அதே முறையில் நீயும் சாகப் போகிறாய்" என்றார். இதைக் கேட்டு அவையில் இருந்த எல்லோரும் திகைத்தனர்.

"உயிர் பிழைக்க வாய்ப்பே இல்லை. நாயை மண்டையில் அடித்துக் கொன்றால் அவனையும் அப்படியே கொல்வார். வயிற்றில் வாளைச் செருகினால் அவன் வயிற்றிலும் வாளைச் சொருகுவர். பாவம் அவன்" என்று நினைத்தனர். ஆனால், விதூஷகன் அமைதியாக இருந்தான்.

"விதூஷகனே! நீ உயிர் பிழைக்க எந்த வாய்ப்பும் இல்லை. இந்தக் நாயைக் கொல்ல எந்தப் படைக் கருவியைப் பயன்படுத்தப் போகிறாய்? வாளா? ஈட்டியா? அம்பா?" என்று கேட்டார். அவர் முகத்தில் புன்முறுவல் தெரிந்தது. எல்லோரும் பதைபதைப்புடன் அவனையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

நாயின் அருகே சென்றான் அவன் இரக்கத்துடன் அதைப் பார்த்தான். "நாயே! என்னை மன்னித்து விடு. எனக்கு வேறு வழி தெரியவில்லை" என்றான்.

அவன் அதை எப்படிக் கொல்லப் போகிறான் என்பதை எல்லோரும் ஆர்வமாகப் பார்த்தனர்.. அந்த நாயின் வாலைத் தன் இரண்டு கைகளாலும் பிடித்துத் தூக்கினான்.

தலைக்கு மேல் அதைச் சுழற்றினான். அப்படியே அதைத் தூக்கி எறிந்தான். சுவரில் வேகமாக மோதிய அது அப்படியே இறந்து விழுந்தது.

"அரசே! நீங்கள் சொன்னது போல இந்த நாயைக் கொன்று விட்டேன். அதே முறையில் நீங்கள் என்னைக் கொல்லலாம்" என்றான்.

அதே முறையில் அவனைக் கொல்ல முடியாது என்பது அரசருக்கு புரிந்தது.

"உன் அறிவுக் கூர்மையை மெச்சுகிறேன். உன்னை உயிருடன் விடுகிறேன். மீண்டும் என்னைக் கேலி செய்து என் கோபத்திற்கு ஆளாகாதே" என்றார்.

"அரசே! நன்றி. இனி கவனமாக நடந்து கொள்வேன்... தங்களை புண்படுத்த மாட்டேன்" என்றான். அரசனும் மன்னித்து விட்டுவிட்டார்.

(முற்றும்)

# மகாபாரதம்



283

பார்வதி-சிலர் மிகவும் முயன்று செல்வத்தைப் பெற்று இன்புறுகின்றனர்..இது ஏன்?

ஈஸ்வரன்-யாசிப்பவர் தம்மை நோக்கிவரும் போது தான தருமம் செய்கின்றனர். அத்தகையோர் மறுபிறவியில் மிகவும் முயன்று அந்தப் பயனை-இன்பத்தை அனுபவிக்கின்றனர்.

பார்வதி தன் சந்தேகத்தைத் தொடர்கிறார். பார்வதி-சிலர் என்ன தான் முயன்றாலும் எதுவும் கிடைக்காமல் அவதிப்படுகின்றனரே..ஏன்?

ஈஸ்வரன்-யார் யாசிப்பவர்க்கு ஒன்றும் தராமல் அவர்களை வெறுத்து ஒதுக்கி விடுகிறார்களோ அத்தகையோர் மறுபிறவியில் எவ்வளவு முயன்றாலும் ஓர் இன்பத்தையும் பெற முடிவதில்லை. எதுவும் வித்தின்றி முளைப்பதில்லை. நற்செயல் அன்றி நற்பலன் இல்லை.

பார்வதி-சிலர் [illegible]

தான காலத்தில், அனுபவிக்க இயலாத முதுமையில் எல்லையற்ற செல்வத்தைப் பெறுகிறார்களே..ஏண்?

ஈஸ்வரன்-அத்தகையோர் [illegible] இருந்தும் தருமச் செயல்களை வெகு நாள் செய்யாதிருந்து மரணகாலத்தில்நோயால் துன்புறும் போது அறம் செய்ய முற்பட்டவராவர்.

அதனால் அனுபவிக்க வேண்டிய காலத்தில் செல்வம் முதலிய வற்றைப் பெறாமல் இறுதிக் காலத்தில் (காலம் கடந்து) பெறுகின்றனர்.

பார்வதி-சிலர் திரண்ட செல்வத்தைப் பெற்றிருந்தும் நோயினால் அவதிப்பட்டு அவற்றை அனுபவிக்க முடியாமல் வருந்துகின்றனரே..ஏன்?

ஈஸ்வரன்-அத்தகையோர் முற்பிறவியில் நோயினால் பீடிக்கப்பட்டு இனிப் பிழைக்க முடியாது என்ற நிலை ஏற்பட்டபின் தான தருமங்களை செய்தவராவர். அதனால் அவர்கள் மறுபிறவியில் செல்வத்தைப் பெற்றிருந்த போதிலும் அவற்றை அனுபவிக்க முடியாதவாறு நோயினால் துன்புறுகின்றனர்.

பார்வதி-சிலர் பார்ப்பதற்கு அழகானவராகவும், இனிமையாகவும் இருப்பது எந்தக் கர்மப் பலனால்?

ஈஸ்வரன்-யார் முற்பிறவியில் நாணம் மிக்கவராகவும் இனிமையாக பேசுபவராகவும் தருமம் செய்பவராகவும் விளங்கினார்களோ.. அவர்கள் இப்பிறவியில் காண்பதற்கு அழகாகவும் இனிமையாகவும் காட்சியளிக்கின்றனர்.

பார்வதி-சிலர் காண்பதற்குக் கவர்ச்சியில்லாது அருவருப்பாக இருக்கின்றனரே..அது எதனால்?

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாமார்க்கும் குடியல்லோம் நமனையஞ்சோம்.
- திருநாவுக்கரசர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சைவ சமயத்தைப் பாதுகாக்க இளைஞர்கள் தயாராக வேண்டும்

வீர இளைஞர்களுக்கு! என்று விழித்தார் சுவாமி விவேகானந்தர்.

இந்துத் துறவியான சுவாமி விவேகானந்தர் வீர இளைஞர்களே! என்று அழைத்ததற்குள் நிறைந்த உட்பொருள் உண்டென்பது உணர்தற்குரியது.

ஆம், இளைஞர்கள் வீரம் பொருந்தியவர்களாக இருக்கும்போதுதான் அந்த நாட்டில் எழுச்சியும் மலர்ச்சியும் ஏற்படும்.

இங்கு வீரம் என்பது புலனைந்தும் வென்றான் தன் வீரமே வீரம் என்ற ஔவையாரின் கருத்தைப் பிரதிபலிப்பதாக இருப்பது நோக்குதற்குரியது.

அன்புக்குரிய இளைஞர்களே! இன்று ஈழத் திருநாட்டில் சைவ சமயம் பல்வேறு சவால்களை எதிர்கொண்டுள்ளது.

மதமாற்றம் தொடக்கம் தொன்மை வாய்ந்த சிவாலயங்களைக் கபளிகரம் செய்வது வரையான பல்வேறு நாசகாரச் செயல்களை சைவ சமயம் எதிர்கொண்டுள்ளது.

சிவபூமி என்று திருமூலரால் முன்மொழியப்பட்ட ஈழத் திருநாடு சிவபக்தனாகிய இராவணேஸ்வரன் ஆண்ட மண்.

எனினும் இந்த வரலாற்றை சிதிலம் செய்து சைவ சமயத்தை வேரறுக்கின்ற பெரும் பிரயத்தனங்கள் நடந்த வண்ணமுள்ளன.

இருந்தும் இது விடயத்தில் வை சமயத்தவர்கள் ஐயம் கொள்ளாதவர்களாக, அக்கறையற்றவர்களாக இருந்து விட்டனர்.

இதன் விளைவு மதமாற்றம் என்பது தமிழர் தாயகத்திலும் மலையகத்திலும் பரவிக் கிடக்கிறது.

பணத்தை இறைத்து, தாய்ச்சமயமாகிய சைவத்தை வெறுக்கவும் வேரறுக்கவும் வைத்து மதம் மாற்றிவிட, அவ்வாறு மதம் மாறியவர்கள் சைவ சமயத்தை எதிர்ப்பதில் முனைப்பாக இருப்பது மிகப்பெரும் வேதனை.

இந்தப் பேரவலத்தின் மத்தியில், இப்போது சைவாலயங்களை இலக்கு வைத்து தெய்வ விக்கிரகங்கள் களவாடப்படுகின்ற அல்லது காணாமலாக்கப்படுகின்ற படுபாதகச் செயல் நடந்தாகிறது.

இக் கொடுமையை இலங்கைப் பொலிஸார் தடுப்பர் என்று நினைத்தால் அது சைவ சமயத்தை அழிக்க நாமும் சம்மதம் தெரிவித்து விட்டோம் என்பதாகவே அர்த்தப்படும்.

எனவே சுவாமி விவேகானந்தர் அழைத்தவாறு, வீர இளைஞர்களே! சைவ சமயத்தையும் அதன் கருவூலமாக இருக்கக்கூடிய சைவ ஆலயங்களையும் பாதுகாக்கத் தயாராகுங்கள்.

மதமாற்றிகளை எதிர்த்து நில்லுங்கள். விழிப்புக்குழுக்களை அமைத்து எங்கள் தொன்மைமிகு தெய்வ விக்கிரகங்களை பாதுகாத்துத் தாருங்கள்.

இது சிவபூமியாகிய ஈழ மண்ணில் இருந்து விடுக்கப்படும் அறைகூவல்.

## செயலிழந்த நிலையில் வவுனியா நகர மணிக்கூட்டு கோபுரம்

(குருமன்காடு)

வவுனியா நகர மத்தியில் காணப்படும் மணிக்கூட்டுக் கோபுர மணிக்கூடுகள் கடந்த பல மாதங்களாக செயலிழந்த நிலையில் காணப்படுகிறது.

நகரத்துக்கு மத்தியில் அதாவது பொதுச் சந்தை, வங்கிகள், வர்த்தக நிலையங்கள் போன்றவற்றிக்கு செல்லும் பாதையில் காணப்படுகிற இம்மணிக் கூட்டு கோபுரமானது கடந்த வருடங்களில் சீரான முறையில் இயங்கியதுடன் வடக்கின் வாயில் என வவுனியா நகரம் காணப்படுவதினால் இம் மணிக் கூட்டு கோபுரம் பலருக்கு நேரம் பார்ப்பதற்கு உதவியதுடன் நகருக்கு அழகையும் தந்தது.

எனவே உரிய தரப்பினர் மணிக்கூட்டு கோபுர மணிக்கூடுகள் இயங்க வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4)

## கற்பிட்டியில் யேசுநாதரின் சிலை, சிலுவைகள் உடைப்பு

புனித நத்தார் பண்டிகைக் கொண்டாட்டங்கள் இடம்பெறவுள்ள நிலையில் கற்பிட்டியில் யேசுநாதரின் சிலை மற்றும் சிலுவைகள் நேற்று முன்தினம் சேதமாக்கப்பட்டுள்ளது.

கற்பிட்டி கிறிஸ்தவ சவக்காலையில் நேற்று முன்தினம் இரவு யேசுநாதரின் சிலை அடித்து நொறுக்கப்பட்டுள்ளதோடு சவக்காலையில் அடக்கம் செய்யப்பட்டவர்களின் அடையாளத்திற்காக பெயருடன் புதைக்கப்பட்ட சுமார் 40 சிலுவைகள் (குருஸ்) இதன்போது சேதப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இனங்களுக்கிடையில் முறுகலை ஏற்படுத்தும் நோக்கில் இவ்வாறு சிலை மற்றும் சிலுவைகள் உடைக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகிப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம)

## தீவக அபிவிருத்தி தொடர்பில் மாவட்ட செயலகத்தில் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தீவக அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை அரசாங்க அதிபர் க.மகேசன் தலைமையில் இடம்பெற்றது.

தீவகப் பிரதேசங்களிற்கான கடற் போக்குவரத்தில் ஈடுபடுகின்ற படகுகள் சான்றிதழ்களைப் பெறுதல் மற்றும் துறைமுகங்களைப் புனரமைத்தல், படகு சேவைகளுக்கு ஏற்ப பேருந்து சேவைகளை மேற்கொள்ளுதல், படகு சேவைகளின்போது பயணிகளுக்குப் பாதுகாப்பு அங்கி வழங்குதல் தொடர்பான விழிப்புணர்வுகளை ஏற்படுத்துதல் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

நெடுந்தீவுத் துறைமுகத்தில் படகு கட்டுமிடத்தில் ஏற்பட்ட குறைபாட்டைச் சீர்செய்தல் மற்றும் துறைமுகப் புனரமைப்பு வேலைகளை மிக விரைவாகத் தொடர்புடைய திணைக்களங்கள் செய்து உறுதிப்படுத்துதல், வடதாரகைப் படகுச் சேவையினை ஞாயிற்றுக்கிழமையிலும் மேற்கொள்ளல் ஆகிய விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

மேற்படி கலந்துரையாடலில் யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்(காணி), எஸ்.முரளிதரன், வடமாகாண ஆளுநரின் உதவிச் செயலாளர், மாவட்டச் செயலகத் திட்ட பணிப்பாளர், உதவி மாவட்டச் செயலாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மாகாணப் பணிப்பாளர், வடமாகாணக் கடற்படை தளபதி மற்றும் கடற்படைப் பிரதிநிதிகள், பிரதேச செயலாளர்கள், துறைசார் திணைக்களப் பிரதிநிதிகள், மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (4-5-18)

## இரத்ததான முகாம்

(குப்பிழான்)

காரை சலஞ்சேர்ஸ் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் வருடாந்த இரத்ததான முகாம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி முதல் காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலை மண்டபத்தில் இடம் பெறும்.

மேற்படி இரத்த தான முகாம் நிகழ்வில் அனைத்துக் குருதிக் கொடையாளர்களையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (4-5-18)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை 26 ஆம் திகதி காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** மானிப்பாய் கார்கில்ஸ், மானிப்பாய் கொமர்ஷல் வங்கி, ஈஞ்சடி வைரவர் கோவிலடி மானிப்பாய், மானிப்பாய் மருத்துவமனை, மானிப்பாய்சந்தை, மேதர் மானிப்பாய், அவுனோர் (பிறைவேற்) லிமிட்டெட், தம்றோ, ஐபிசி தமிழ், நொதேர்ண் மருத்துவமனை, சூரியஉதயம் (வீனஸ் மருத்துவமனை), பி.சி.சி.ஏ.எஸ். கல்லூரி, அம்மன் வீதி, கந்தர்மடம், ஆரியகுளம்- பருத்தித்துறை வீதி, இலுப்பையடிச் சந்தி, பலாலி வீதி, பிஸாஹட் மற்றும் ஐபிசி தமிழ், ஆனைப்பந்தி, சிவராஜா அவெனியூ, பலாலி வீதி, ஸ்ரான்லி வீதி, ஆரியகுளம் சந்தி, யாழ். மருத்துவமனை-பலாலிவீதி, பனிக்கர்லேன் சந்தி, தலங்காவில் பிள்ளையார் கோவிலடி, திருநெல்வேலி சந்தை ஆகிய இடங்களிலும்

**கிளிநொச்சி பிரதேசத்தில்** இயக்கச்சி இராணுவ முகாம், பாரம்பரிய விவசாயப்பண்ணை, விநாயகபுரம், இயக்கச்சி இராணுவ முகாம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



### பெண்ணுக்கு ஆபரணம் எது?

❖ வாழ்வில் ஒரு நன்மையாவது செய்யுங்கள். அதனால், பாவம் அனைத்தும் தீர்ந்து விடும்.

❖ பிறவிப்பிணி நீங்க வேண்டுமானால், ஆசையின் சாயலே அற்றுப் போய் விட வேண்டும். வேறெந்த முயற்சியும் வீணானவை தான்.

❖ யார் என்ன வேண்டுமானாலும் சொல்லிக் கொண்டுஇருக்கட்டும். எதைச் சரி என்று நினைக்கிறீர்களோ அதை கடவுளின் வழியில் செய்து கொண்டிருங்கள்.

❖ பெண்ணுக்கு நாணமே ஆபரணம். அது இல்லாத பெண்ணைப் பெண் என்றே சொல்ல முடியாது.

❖ ஆசையை யாராலும் விலக்க முடியாது. உடம்பு என்ற ஒன்று இருக்கும்வரை அதுவும் இருந்தே தீரும். ஆனால், அதை கட்டுக்குள் வைக்க வேண்டும்.

❖ "கடவுள் என்னுடையவர்" என்ற சிந்தனையை விதைப்பதற்கு ஏற்றது குழந்தைப் பருவமே. பக்தியை குழந்தைப் பருவத்திலேயே கற்றுக் கொடுங்கள்.

❖ தாயும் தந்தையும் மகிழ்ச்சி அடைந்தால், கடவுளும் மகிழ்ச்சி அடைகிறார்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் நன்றி நவில்தலும்

பிறப்பு
06 . 05 . 1948



இறப்பு
25 . 11 . 2021

கறுக்காய்த்தீவு, பூநகரியைப் பிறப்பிடமாகவும் இல.23, மாதிரிக் கிராமம்
பல்லவராயன்கட்டு, பூநகரியை வதிவிடமாகவும் கொண்ட

## அமரர் இராசலிங்கம் சிவபாக்கியம் (கிளி அக்கா)

எமது குடும்ப குலவிளக்கின் அந்தியேட்டிக் கிரியை 2021.12.23 வியாழக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்று வீட்டுக்கிருத்திய கிரியை 2021.12.25 இன்று சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது அன்னை, குடும்ப விளக்கு நோயுற்றபோது வைத்தியசாலைக்கு வருகை தந்து பார்த்து ஆறுதல் வார்த்தை கூறியவர்கள், அன்னையின் மரணச் செய்தி அறிந்து ஆறுதல் வார்த்தை, அனுதாபம் தெரிவித்தவர்கள் மற்றும் இறுதிச் சடங்கிலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் கலந்துகொண்ட அனைத்து உறவுகள், மனிதநேயமிக்க உள்ளங்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள்.

ஓம் சாந்தி! சாந்தி!!! சாந்தி !!!

### இல்லத்தரசியே எம் ஒளிவிளக்கே!

தூக்காத சுமையெல்லாம் தாங்கினாய்
வேண்டாத தெய்வமெல்லாம் வேண்டி விரதம் இருந்தாய்
கண்மூடித் தூங்கினாலும் கண்ணுக்குள் நீயே
கண்விழித்து பார்த்தால் காணவில்லையே!
எங்களுக்காய் பாடாய் உழைத்தாய்
தங்கமணியே நீ ஓடாய் தேய்ந்தாயம்மா!
அன்பு பாசம் நேசம் சிரிப்பு மலர்ச்சி
இன்பத்தை காட்டி கோபமே வராமல்
உன் மடியில் நாம் மகிழ்ந்திருந்தோம்
தனிமரமாய் தவிக்கவிட்டு நீ எங்கே சென்றாயம்மா!
எங்கு சென்றாலும் உம் ஆன்மா
ஆண்டவன் பாதம் ஆறுதலடைக
எம் குடும்ப விளக்கின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

(C-3347)

இல.23, மாதிரிக் கிராமம்,
பல்லவராயன்கட்டு, பூநகரி.
077 052 3571, 077 111 3868

அன்னையின் பிரிவால் துயருற்றிருக்கும்
கணவன், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்
மற்றும் உறவின் உறவுகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20 பேர்...

இதற்கமைய நாட்டில் பதிவான கோவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 14,852 ஆக அதிகரித்துள்ளது. (ம)

## முற்பணத்...

நிருபம் தற்போது வெளியிடப்பட்டுள்ளதாக பொதுச் சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த விசேட முற்பணத் தொகையை வழங்கும் நடவடிக்கை ஜனவரி முதலாம் திகதி முதல் பெப்ரவரி 28ஆம் திகதி வரை இடம்பெறும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

## வவுனியாவில்...

துள்ளது.

இதனையடுத்து குறித்த பெண் காஸ் சிலிண்டரை பாதுகாப்பாக அகற்றி மேலதிக அனர்த்தம் ஏற்படுவதை தடுத்துள்ளார். அத்துடன் குறித்த சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். (ம-250,299)

## அமைச்சர்...

மாவட்ட செயலகம் முன்பாக மாபெரும் வீதி மறியல் போராட்டம் முன்னெடுத்திருந்தனர்.

குறித்த போராட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார், கஜேந்திரன் மற்றும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஆதரவாளர்களும் கலந்து கொண்டிருந்த நிலையில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீனவர்களினால் முன்னெடுக்கப்பட்ட வீதி மறியல் முடக்க போராட்டத்திற்கு வருகை தந்தபோது டக்ளஸ் தேவானந்தாவின் வருகையை அவதானித்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஆதரவாளர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் அவ்விடத்தை விட்டு நழுவிச் சென்றனர். (ம-104)

## விக்கிரகங்கள்...

திருடப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருடப்பட்ட 5 விக்கிரகங்களும் கைமாற்றப்பட்டுள்ளதாக ஆரம்ப விசாரணையில் தெரியவந்துள்ள நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

டிசம்பர் 9ஆம் திகதிக்கும் நேற்று முன்தினம் 23ஆம் திகதிக்கும் இடையே தெல்லிப்பழை மற்றும் காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுகளில் உள்ள இந்து ஆலயங்களில் விக்கிரகங்கள் திருடப்பட்டன.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர். இந்த நிலையில் காங்கேசன் துறை நல்லிணக்கபுரத்தைச் சேர்ந்த 34 வயதுடைய ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டார்.

அவரது அலைபேசியில் திருடப்பட்ட 5 விக்கிரகங்களின் ஒளிப்படங்களும் காணப்பட்டன. தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் மேலும் 2 விக்கிரகங்கள் கைப்பற்றப்பட்டன.

அவை இரண்டும் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டன. சந்தேகநபரும் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார். (ம-18,33)

## நாவற்குழி புதிய...

மீது தாக்குதல் நடத்திய பின்னர் தாக்குதலுக்கு உள்ளான குழு தாக்குதல் நடத்திய குழுவின் வீடுகள் மீது தாக்குதல் நடத்தியுள்ளது.

இரு தரப்பு மோதல்களில் பல வீடுகள் சேதம் அடைந்துள்ளன. பெண் ஒருவர் உட்பட நால்வர் படுகாயம் அடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி பொலிஸார் சம்பவ இடத்திற்குச் சென்றும் நிலைமையை கட்டுப்படுத்த முடியாத நிலையில் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு புதிய குடியிருப்பு பகுதி சுற்றிவளைக்கப்பட்டு நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. (ம)

## பிரபாகரனை...

தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சரத் பொன்சேகா என்பவர் இரட்டை வேடமாக செயற்படுகின்ற ஒருவர். மக்கள் பிரதிநிதியாக செயற்படுவதோடு பொது நிகழ்வுகளில் இராணுவ உடையுடன் செல்லக்கூடிய இரட்டை வேடம் போடும் ஒரு நடிகராவார்.

சிங்கள ஊடகம் ஒன்றுக்கு அவர் வழங்கிய நேர்காணலிலேயே தமிழீழ விடுதலைப் புலிகளுடைய தலைவர் மேதகு பிரபாகரன், விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்தோர், ஏனைய விடுதலைப் போராட்ட இயக்கத்தில் இருந்தவர்கள் படிப்பறிவு அற்றவர்கள் என்ற ஒரு கருத்தினை பதிவு செய்துள்ளார். நான் அவருக்கு சொல்ல விரும்புவது என்னவென்றால் இலங்கையினுடைய தலைவர்களாக, பிரதமராக இருந்தோர் மற்றும் ஏனையோர் எட்டாம் ஆண்டு பத்தாம் ஆண்டு படித்தவர்கள். பல்கலைக்கழகப் படிப்பு அல்லது பட்டப்படிப்பினை முடித்தவர்களல்ல.

ஆனால் அனைவருமே சாதாரண மட்டத்திலிருந்து தலைவர்களாக வந்தவர்கள். எனவே இவ்வாறு பல உதாரணங்களைக் கூறமுடியும்.

ஆனால் தலைவர் பிரபாகரன் தன்னுடைய 15ஆவது வயதிலேயே விடுதலைப் போராட்டத்தில் இணைந்துவிட்டார். அவர் க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு விண்ணப்பித்துவிட்டு பரீட்சைக்கு தோற்றவில்லை.

அதேபோல ஏனைய இயக்கங்களினுடைய தலைவர்களையும் எடுத்துப் பார்த்தால் அவர்களும் உயர்படிப்புகளை படித்திருக்கவில்லை. ஆனால் அனுபவங்களின் மூலம் செயற்பட்டவர்கள்.

உலகத்திலே இராணுவத்தின் உயர் பதவியான மார்சல் பட்டத்தினை பெற்றவராகவே உலகத்திலுள்ள அனைவரும் பிரபாகரனை பார்க்கின்றார்கள். பிரபாகரன் ஒரு நடைமுறை அரசை மற்றும் ஒரு முப்படையினை வழிநடத்தியவர்.

குறிப்பாக ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கையை ஓயாத அலை என்னும் முறியடிப்பு சமர் மூலம் முறியடித்த பெருமை பிரபாகரனையே சேரும்.

எனவே அவ்வாறான திறமைகளை கொண்டவரை இரட்டை வேடம் போடும் பொன்சேகா போன்ற நடிகர்கள் படிக்காதவர் என்று கூறும் அளவுக்கு அவர் எளிதானவர் அல்ல என்றார். (ம-104)

## மக்கள் சிக்கன...

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

மானிய விலையில் குடிநீர், மின்சாரம் ஆகியவற்றை வழங்குவதன் காரணமாக மக்கள் அவற்றை சிக்கனமாக பயன்படுத்துவதில்லை. எரிபொருள் விலையை மக்கள் உணர இடமளித்தால், அவர்கள் தேவையற்ற பயணங்கள் செல்வதை நிறுத்தி விடுவார்கள்.

தண்ணீர் மானிய விலையில் வழங்கப்படுவதால், குழாயை திறந்து விட்டு, மீசை வெட்டுகின்றனர். 5 நிமிடத்தில் குளித்து முடிக்கலாம் என்ற போதிலும் 20 நிமிடங்கள் வரை தண்ணீரில் தலைகுளிக்கின்றனர்.

தண்ணீருக்கு செலவாகும் பணத்தை மக்களிடம் அறவிட்டால், மக்கள் விரயமாக்குவதை நிறுத்துவார்கள். மின்சாரத்தையும் நாம் மானிய விலையில் வழங்குகிறோம். அதற்கான கட்டணத்தை முழுமையாக மக்களிடம் அறவிட்டால், மின்சாரத்தை பயன்படுத்தும்போது சிக்கனமாக பயன்படுத்துவார்கள்.

அத்துடன் உலகில் ஏனைய நாடுகள் தற்போதைய சூழ் நிலையில் சம்பளத்தைகுறைத்துள்ளன.

எனினும் அந்நாடுகளில் மக்கள் வீதியில் இறங்கி எதிர்ப்பை காட்டவில்லை. இது உலகில் சம்பளத்தை அதிகரிக்கும் நேரமல்ல, குறைக்கும் நேரம் என்றார். (ம)

## ஒரு நாடு ஒரு...

அமைச்சர் அலி சப்ரியையும் கபினட் அமைச்சராக ஜனாதிபதிதான் நியமித்தார்.

இந்நிலையில், ஜனாதிபதியின் ஞானசாரர், ஜனாதிபதியின் அமைச்சரை பதவி விலக சொல்கிறார். இதென்ன கூத்து? என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்.பி கேள்வி எழுப்பியுள்ளார்.

மனோ எம்.பி மேலும் கூறியுள்ளதாவது, எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் இப்படி சொன்னால் அதில் ஒரு அரசியல் தர்க்கமாவது இருக்கும். அப்படியும் நான் அதை சொல்ல மாட்டேன். அரசை நாம் கடுமையாக எதிர்ப்பது என்பது வேறு.

ஆனால் இந்த அரசுக்குக்கு உள்ளே சிறுபான்மை கபினட் அமைச்சர்கள் இருப்பது நல்லது. நாம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் இதுதான் இலங்கை அரசாங்கம். இவர்தான் ஜனாதிபதி. அமைச்சர்கள் அலி சப்ரி, டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் அங்கே இருப்பதால் தமிழ் பேசும் மக்களின் குறைந்தபட்ச பிரச்சினைகளையாவது அரசாங்க தலைமையின் கவனத்திற்கு கொண்டுவர முடிகிறது.

இந்த குறைந்தபட்ச அவகாசத்தையும் கூட தட்டிப்பறிக்க இந்த காவி பயங்கரவாதி ஆள் முயல்கிறார்.

இந்து ஆலய வளவில் பௌத்த தேரரின் சடலத்தை எரித்தவர் தானே இவர்? ஞானசார தேரர் விசேட நபர். இவர் மீது சட்டம் பாயாது. ஆனால், முகநூலில் எதையாவது சிறுபிள்ளைத்தனமாக எழுதி விடும் தமிழ் பையன்களை தேடி வீட்டுக்கு பொலிஸ் வருகிறது. ஞானசார தேரருக்கு விசேட சட்ட விலக்கு இருக்கிறது. ஆகவே, இவரது செயலணியின் பெயரை "ஒரு ஆளுக்கு ஒரு சட்டம்" என மாற்றி நான் பிரேரிக்கிறேன் என்றார்.(ம)

































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனை

யாழ்ப்பாணம் நுணாவில் மேற்கு A9 வீதியிலுள்ள பெற்றோல் செற் அருகாமையில் நுணாவில் வாசிகசாலை முன்பாக 8 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. (இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்)

A9 வீதியிலிருந்து 75 மீற்றர் தூரம்

(தரகர் தேவையில்லை) (9234)

076 890 9259
077 015 0353

## வேலை வாய்ப்பு

விவசாய பண்ணை மேற்பார்வையும் வேலையும்

தகைமை :
Agriculture engineer, Agriculture science, Agriculture Degrees, Animal science Degrees

விசேட தகைமை : English, Sinhala மொழி அறிவு, கணனி அறிவு

விவசாய ஆர்வம், விவசாய அனுபவம் மிக அவசியம்.

பிறந்த இடம் : கிளிநொச்சி மாவட்டம் அல்லது முல்லைத்தீவு மாவட்டம் என்பது அவசியம்.

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். வயது : 23 - 33 (9173)

அனுப்பவேண்டிய முகவரி lingammaster@gmail.com

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சுன்னாகம் கந்தரோடைப் பகுதியில் கணக்கர் வளவு 4 பரப்பு காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)

2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடிப் பாதையுடன் சுன்னாகம் பஸ் நிலையத்தில் இருந்து 800 மீற்றர் தூரம்

பார்வையிடும் நேரம்

காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

[ தரகர் தேவையில்லை ]

விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (9224)

077 814 7389, 077 614 7333

## இறைச்சிக் கோழிகள் விற்பனை

புறொய்லர், பேரன்ஸ், கல்பேட் இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்தும்/ செய்யாமலும் மொத்தமாகவும் சில்லறையாகவும் மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

K.S. சிவகுமாரன் பாம், கல்வியங்காடு

இடம் மாற்றம் : தற்பொழுது முடமாவடி, கெனடி லேன், திருநெல்வேலி. (கீர்த்தனா கடைக்கு அண்மையாக)

077 684 5519 (9236)

## யாழ். வேலை வாய்ப்புகள்

30+ Free Vacancies, 150+ Selection Vacancies

( நேர்முகத் தேர்வு காட்சிகள் மற்றும் முழுமையான விபரங்களுக்கு Youtube இல் DEWMAS என Search செய்து பார்வையிடலாம். ) (9230)

DEWMAS 077 773 3368

## இரவுக் காவலாளி தேவை

திருநெல்வேலியில் இயங்கும் வியாபார நிலையம் ஒன்றிற்கு இரவு நேர காவலாளி தேவை.

(50 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு முன்னுரிமை)

கடமை நேரம் : பிற்பகல் 5.30 - காலை 8.30 மணி வரை (9221)

☎ - 076 992 2124

## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் உள்ள பிரபல கட்டட நிறுவனம் ஒன்றிற்கு மேசன் மற்றும் உதவியாளர்கள் தேவை.

குறிப்பு : தங்கிநின்று வேலை செய்பவர்கள் விரும்பத்தக்கது. (9217)

076 200 4827
077 558 8835

உரும்பிராய் / கோப்பாய / திருநெல்வேலி / சுன்னாகம் / இருபாலை / கல்வியங்காடு ஆகிய பகுதிகளில் 1 1/2 பரப்புக் காணி தேவை.

076 266 3332 (9237)

A trim of Chartered Accounts in jaffna is seeking a CA member or finalist to join as with the scope to become a partner.

075 099 9243 (9233)

Email- mrandco2011@yahoo.com

## வீட்டு வேலையாட்கள் தேவை

வீட்டு வேலை/வயோதிபர் பராமரிப்பு வேலைகள் தங்கிநின்று வேலை செய்யக்கூடிய பெண் வேலையாட்கள் தேவை. (9229)

077 773 3368

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் (C-3322)

V2 TRAVELS

எமது கிளைகள்

கிளிநொச்சி, சுன்னாகம், சாவகச்சேரி, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, திருகோணமலை, வல்வெட்டித்துறை, கோப்பாய், புத்தூர்

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 20'000/-
பயிற்சியின்போது - 15'000/-

16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

0777-068-777
v2vacancies@gmail.com

## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

UK-975/=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-3286)

0768226240 DHL

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 25.11.2021 (அபரபக்க சஷ்டி திதி)
வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் தந்தை

அமரர்

## கார்த்திகேசு வேலும்மயிலும்

(ஓய்வுநிலை அதிபர்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று முன்தினம் (23.12.2021) வியாழக்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் இடம்பெற்றது. வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (25.12.2021) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதி நிகழ்வில் எமக்கு பலவழிகளிலும் உதவி புரிந்தவர்கள் மற்றும் நேரிலும் தொலைபேசி மூலமாகவும் சமூகவலைத்தளங்கள் ஊடாகவும் ஆறுதல் தெரிவித்தவர்கள், மலர் வளையங்கள், அஞ்சலிப் பிரசுரங்கள், பதாதைகள் போன்றவற்றின் ஊடாக அஞ்சலி செலுத்தியவர்கள், இறுதிக் கிரியைகளின்போது கலந்துகொண்டவர்கள், இன்னும் பல வழிகளில் உடனிருந்து உதவிபுரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள், அரசியல் பிரமுகர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். (C-3351)

புதிய வீதி, வட்டு மேற்கு,
வட்டுக்கோட்டை. 077 175 0128

குடும்பத்தினர்
கா. வே. குகேந்திரன்
(வி.கெ.ஜெகன் - முன்னாள் பா.ம.உ)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.12.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org